Y.M.C.A

Registered as a News Paper பக்கங்கள் 06 விலை ரூபா: 6-00

# ஈழநாதம்

வெள்ளி மஞ்சரி

நாதம் 03 திருவள்ளுவர் ஆண்டு 2203 கார்த்திகை 05 (20-11-1992) வெள்ளிக்கிழமை ஓசை 276

## ஜப்பான் முதலீட்டாளர்கள் முதலீடு செய்ய மறுப்பு

இலங்கையில் ஏற்பட்டுள்ள உள்நாட்டு யுத்தத்தினால் ஜப்பானிய முதலீட்டாளர்கள் முதலீடுசெய்ய அச்சம் கொண்டுள்ளதாக ஜப்பானிய முதலீட்டாளர் சங்க தலைவர் தடாதிலிங் கொழும்பில் பத்திரிகையாளர் மாநாட்டில் தெரிவித்துள்ளார். தென் ஆசிய பகுதிகள் வர்த்தகத்திற்கான ஒரு சந்தையாகும் என்றும் தென்கிழக்காசியா தொழில் நிறுவனங்கள் அமைப்பதற்கு மட்டுமே சிறந்தது என்றும் சிறிலங்காவில் அசாதாரண நிலை நிலவுமானால் எவரும் உற்பத்தியில் ஈடுபடமாட்டார்கள் என்று மேலும் தெரிவித்தார். தற்போது ஜப்பானிய முதலீட்டாளர்கள் இங்கு முதலீடு செய்ய (6 ஆம் பக்கம் பார்க்க)

# செட்டிகுளத்தில் துணிகரத் தாக்குதல்; 10 ராணுவத்தினர் பலி; பலர் காயம்

## 10 காவலரண்களும் புலிகளால் தகர்ப்பு

[வவுனியா]

செட்டிகுளம் இராணுவ முகாமின் தொடர் காவலரண்கள் மீது நேற்று அதிகாலை விடுதலைப் புலிகள் மேற்கொண்ட துணிகரத் தாக்குதலில் பத்திற்கும் மேற்பட்ட சிறிலங்கா இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். பலர் படுகாயமடைந்தனர். பத்துக் காவலரண்கள் தாக்கி அழிக்கப்பட்டன. பல நவீனரக ஆயுதங்களும் விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்டன.

இத் தாக்குதலில் விடுதலைப் புலிகள் தரப்பில் இரு போராளிகள் வீரச்சாவடைந்தனர்.

நேற்று அதிகாலை 12.04 மணியளவில் இத் துணிகரத் தாக்குதல் புலிகளால் மேற்கொள்ளப்பட்டது. விடுதலைப் புலிகளின் உக்கிர தாக்குதலைத் தொடர்ந்து இறந்த தமது சகாக்களின் உடல்களையும் விட்டு விட்டு காயமடைந்தவர்களை தூக்கிக் கொண்டு ஏனைய இராணுவத்தினர் முகாமிற்குள் ஓடிவிட்டனர்.

இத் தாக்குதலில் பத்துக் காவலரண்கள் முற்றாக அழிக்கப்பட்டன.

## கைப்பற்றப்பட்ட ஆயுதங்கள்

(வவுனியா)

வவுனியா செட்டிகுளம் சிறிலங்கா இராணுவ தொடர் காவலரண்கள் மீது நேற்று அதிகாலை விடுதலைப்புலிகள் மேற்கொண்ட தாக்குதலின் போது கைப்பற்றப்பட்ட ஆயுதங்களின் விபரம் வருமாறு:

★ ஆர். பி. ஜி. — 01
★ 60 எம். எம். மோட்டர் — 01
★ 40 எம். எம். பிஸ்டல் — 01
★ ஏ. கே. எல். எம். ஜி. — 02
★ ரி - 56 - 2 ரக துப்பாக்கி — 01
★ ரி - 56 - 1 ரக துப்பாக்கி — 01
★ ரி-56 புதிய மொடல் துப்பாக்கி — 01
★ ரி-56 பட்மொடல் துப்பாக்கி — 01
★ எஸ் எல். ஆர் ரக துப்பாக்கி — 01
★ ஆர். பி. ஜி. எறிகணை — 03
★ 60 எம். எம். பராலைட் — 02
★ ஏ. கே எல். எம். ஜி ரம்மகசீன் — 08
★ நடுத்தர ரவைகள் — 2500
★ நேற்ரோ ரவைகள் — 165
★ எரி குண்டு — 01
★ எஸ். எல். ஆர் மகசின் — 01
★ ஏ. கே. எல். எம் ஜி. லிங் — 600
★ ஜே. ஆர் சறுப்பு — 04
★ ஜே ஆர் சிறிது — 02
★ ரி. என் ரி — 01
★ ஏ. கே. கோல்சர் — 04
★ ஜி. 3 மகசீன் — 05
★ கெல்மட் — 06
★ பைனட் — 04
★ தண்ணீர்கான் கோல்சர் — 02
★ மில்ரி பெல்ட் — 04
★ ரெயின் கோட் — 02
★ கிட்பாக் — 04
★ சிவில் பாக் — 02
★ சப்பாத்து சோடி — 05

## தோப்பூர் பாலம் தகர்ப்பு

திருக்கோணமலை மாவட்டம் தோப்பூர் பாலத்தில் நேற்று குண்டு ஒன்று வெடித்ததால் பாலம் பலத்த சேத (6 ஆம் பக்கம் பார்க்க)

## கிளாலி கடலில் பீரங்கித் தாக்கு

கிளாலி கடற்பரப்பில் சிறிலங்கா கடற்படை பீரங்கிப் படகு நேற்று இரவு பீரங்கித் தாக்குதலை மேற்கொண்டது [6 ஆம் பக்கம் பார்க்க]

## பேச்சிலும் செயலே சிறந்த போதனை அதனை உணர்த்தியவர் மாவீரர்

உலகில் ஒடுக்கப்படுகின்ற ஒவ்வொரு இனமும் புரிந்து கொண்டிருக்கின்றது "எந்த வல்லரசினாலும், எந்த நவீன வகை படைக்கலங்களினாலும் நசுக்கப்பட முடியாதது உரிமைப் போர்." இந்த உன்னத மொழியினை உலகிற்கே பகர்ந்து நிற்கிறது எம் மாவீரர் தற்கொடை. இவ்வாறு தமிழீழ விடுதலைப் புலிகள் யாழ். மாவட்ட அரசியல் துறை செயலகம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேடையேறி முழங்கியவர்களல்ல மாவீரர்கள். வெட்டிப் பேச்சுப் பேசும் 'வாய்ச்சொல் வீரர்'களுமல்ல, ஆயினும் உலகுக்கு எல்லாம் அறிவித்து நிற்கிறார். "தாயகத்திலே காதலைக் காட்டு; விடுதலையிடம் விசுவாசத்தைக் காட்டு, சமர்க்களத்தே வீரத்தைக் காட்டு!" வாய்திறந்து சொன்னவர்களல்ல பேச்சிலும் செயலே சிறந்த போதனை என்ற கோட்பாட்டைக் கொண்டவர்கள் மாவீரர்கள் தமது ஒவ்வொரு அசைவிலும் ஒவ்வொரு நடைமுறையிலும் உணர்த்தி நின்றார்கள்.

உலகின் ஒவ்வொரு உரிமைப்போராட்டத்திற்கும்முன் உதாரணமாய், வழிகாட்டியாய் மிளிர்கின்றது தமிழீழ விடுதலைப் போர் ஒவ்வொரு தமிழீழக் குடிமகனும் மார் தட்டி நிமிர்கின்றான். இது தம்மக்களுக்கு மாவீரர் தந்த முதற்பரிசு எனவும் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மாதாந்தம் மண்ணெய் எடுத்துவர முயற்சி

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்துக்குத் தேவையான மண்ணெண்ணையை தனிக்கப்பல் மூலம்எடுத்து வருவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது.

இக்கப்பல் மூலம் முதல் தடவையாக சுமார் 5000 பீப்பா மண்ணெண்ணையை எடுத்து வருவதற்கும் தொடர்ந்து மாதாந்தம் ஆயிரம் பீப்பா மண்ணெண்ணையை எடுத்து வருவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது.

கொழும்பு சென்று திரும்பிய அரசஅதிபர் இத்தகவலை வெளியிட்டார்.

யாழ். அரச அதிபர் கூட்டுப் ... அதிகாரி ஹமில்டன் வணசிங்காவுடன் நடத்திய பேச்சு வார்த்தைகளைத் தொடர்ந்து இந்த நடவடிக்கை எடுக்கப் (6 ஆம் பக்கம் பார்க்க)

## நாளை தமிழீழ மாவீரர் வாரம் தேசிய கொடி ஏற்றலுடன் ஆரம்பம்

[நமது நிருபர்]

தமிழீழத் தேசியக்கொடி ஏற்றலுடன் நாளை தமிழீழ மாவீரர் வாரம் தமிழீழமெங்கும் உணர்வு பூர்வமாக ஆரம்

தாயக சுதந்திரத்திற்காக தம் இன்னுயிர்களைத் தியாகம் செய்த அனைத்து மாவீரர்களையும் நினைவுகூரு முகமாகவும், தமிழீழத் தேசியத்தை

வும் தமிழீழ மாவீரர் வாரம் உணர்வு பூர்வமாக அனுஷ்டிக்கப்படவுள்ளது.

தமிழீழ மாவீரர் வாரம் நாளை 21 ஆம் திகதி முதல் 27

★ ஏ. கே எல். எம். ஜி ரம்மகசீன் — 08
★ ரி - 56 மகசீன் — 17
★ சப்பாத்து சோடி — 05
★ கிளைமோர் வெடிக்கவைக்கும் கருவி — 01

வெளியிட்டார்.

யாழ். அரச அதிபர் கூட்டுப் படைத் தலைமையகத் தலைமை

மாவீரர் வாரம் தமிழீழமெங்கும் உணர்வு பூர்வமாக ஆரம்பமாகிறது.

களையும் நினைவுகூரு முகமாகவும், தமிழீழத் தேசியத்தை உலகிற்கு உணர்த்துவதற்காக

தமிழீழ மாவீரர் வாரம் நாளை 21 ஆம் திகதி முதல் 27 ஆம் திகதி வரை தமிழீழமெங்கும் மிகவும் எழுச்சி பூர்வமாக மக்களால் நடாத்தப்படவுள்ளன. நாளை காலை 9 மணிக்கு தேசியக் கொடி ஏற்றலுடன் மாவீரர் வாரம் ஆரம்பமாகி 27 ஆம் திகதி மாலை 5 மணிக்கு தேசியக்கொடி இறக்கலுடன் முடிவடையும் தேசியக் கொடியை ஏற்றிவைத்து அதற்கு மலர் தூவி தமிழீழ மக்கள் அனைவரும் வணக்கம் செலுத்துவதுடன் அதற்கு மரியாதை செலுத்துவர் பாடசாலைகள், தனியார்கல்வி நிறுவனங்கள், அரச, மற்றும்

[6 ஆம் பக்கம் பார்க்க]

# இரு புலிகள் வீரச்சாவு



மேஜர் ஆதித்தன்



மேஜர் சிலம்பரசன்

(வவுனியா)

செட்டிகுளம் தொடர் காவலரண்கள் மீது விடுதலைப் புலிகள் மேற்கொண்ட துணிகரத் தாக்குதலில் இரு விடுதலைப் புலிகள் வீரச்சாவைத் தழுவிக் கொண்டனர்.

மேற்படி தாக்குதலின்போது முன்னாள் முல்லைத்தீவு துணைப் பொறுப்பாளர் மேஜர் ஆதித்தன் [சின்னப்பு ஜெயதாஸ் - தங்கபுரம், அலம்பில்], மேஜர் சிலம்பரசன் [கீசிங்] (தனபாலசிங்கம் சிவபாலேஸ்வரன் - கோதண்ட நொச்சிக்குளம், சாஸ்திரி கூழாங்குளம், வவுனியா) ஆகியோரே வீரச்சாவடைந்தவர்களாவர்.

வீரச்சாவடைந்த இந்த இரு வேங்கைகளுக்கும் விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

# தெல்லிப்பழை, பண்டத்தரிப்பில் நேற்று விமானக் குண்டுவீச்சு

## வீடுகள் பல சேதம்

(யாழ்ப்பாணம்)

சிறிலங்கா விமானப்படை குண்டுவீச்சு விமானங்கள் தெல்லிப்பழை, பண்டத்தரிப்பு பகுதிகளில் மேற்கொண்ட குண்டு வீச்சுத் தாக்குதல்களினால் பல வீடுகள் பலத்த சேதமடைந்தன.

நேற்றுக் காலை 10.30 மணியளவில் தெல்லிப்பழை பகுதியை வட்டமிட்ட இரண்டு குண்டு வீச்சு விமானங்கள் மக்கள் குடியிருப்புக்கள் மீது மேற்கொண்ட தாக்குதல்களினால் ஆனைக்குட்டி மதவடியை அண்டிய மலை வேம்படி பகுதியில் மூன்று வீடுகள் சேதமடைந்தன. இப் பகுதியில் விமானங்கள் மூன்று தடவைகளில் ஆறு குண்டுகளை வீசியது குறிப்பிடத்தக்கது.

இதனைத் தொடர்ந்து மீண்டும் பகல் 11.30 மணியளவில் பண்டத்தரிப்பு பகுதியை வட்ட மிட்ட இரண்டு விமானங்கள் நான்கு குண்டுகளை வீசின இவை பண்டத்தரிப்பு சந்தியை அண்டி வீழ்ந்து வெடித்ததாக தெரியவருகிறது. (9.11)

# மண்டூரில் சுற்றிவளைப்பு; 150க்கு மேற்பட்டோர் கைது

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டம் மண்டூரில் 150 க்கு மேற்பட்ட பொதுமக்கள் சிறிலங்கா விசேட அதிரடிப் படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த 11 ஆம் திகதி மண்டூர் பகுதியைச் சுற்றிவளைத்த விசேட அதிரடிப் படையினர் 150 க்கு மேற்பட்ட பொது மக்களைக் கைதுசெய்து முகாமிற்குக் கொண்டுசென்றுள்ளனர். முகாமில்வைத்து இவர்கள் கடும்சித்திரவதைக்கு உள்ளாக்கப்பட்டதாகத் தெரியவருகிறது.

இவர்கள் பற்றிய மேலதிக விபரங்கள் எதுவும் தெரியவரவில்லை.

# வவுனியா நகர்ப் பகுதியில் இராணுவம் தீவிரசோதனை

வவுனியா நகரில் நேற்றுமுன்தினம் காலைமுதல் இராணுவத்தினரும், பொலிஸாரும் தீவிர சோதனை நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளதாகத்தெரிவிககப்படுகிறது.

வவுனியா நகர்ப்பகுதி எங்கும் இராணுவத்தினரும், பொலிஸாரும் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாகவும், குண்டு செயலிழக்கச்செய்யும் நிபுணர்களும் படையினருடன் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாகவும் அங்கிருந்துவரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

யாழ். குடாநாட்டில் இருந்து வெடிகுண்டுகள் வவுனியாவுக்கு கொண்டுவரப்பட்டிருப்பதாக பாதுகாப்புப் படையினருக்குக் கிடைத்ததாகக் கூறப்படும் தகவலை அடுத்தே இந்நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதாகவும் தெரியவருகின்றது.

# விடுதிகள் மீது படையினர் பாய்ச்சல்; கொழும்பில் தமிழ் இளைஞர் கைது

(கொழும்பு)

கொழும்பு நகரில் தமிழ் இளைஞர்களை சிறிலங்கா ஆயுதப் படையினர் கண்டபடி கைது செய்வது தொடர்கிறது.

கடற்படைத் தளபதி கிளான்சி பெர்னான்டோ குண்டுத் தாக்குதலில் கொல்லப்பட்டதைத் தொடர்ந்து தமிழ் இளைஞர்களைத் தேடும் சிறிலங்கா படையினரது வேட்டை தீவிரமாக்கப்பட்டிருக்கிறது.

இதுவரை நூற்றுக்கணக்கான தமிழ் இளைஞர்கள் கைது செய்யப்பட்டிருக்கின்றனர்.

மலிபன் வீதியில் மட்டும் பத்துக்கும் மேற்பட்ட இளைஞர்கள் கைது செய்யபபட்டிருக்கின்றனர். வெள்ளவத்தை, தெகிவளை ஆகிய பகுதிகள்

(6ஆம் பக்கம் பார்க்க)

# சிறையிலுள்ளோர் கடிதம் அரச அதிபர் எருத்துவந்தார்

களுத்துறைச் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருப்பவர்களிடமிருந்து அவர்களது உறவினர்களுக்கான கடிதங்கள் எடுத்துவரப்பட்டிருக்கின்றன

கொழும்பு சென்றிருந்த யாழ். அரசாங்க அதிபர் திரு. கா. மாணிக்கவாசகர் தடுத்து வைக்கப்பட்டிருப்பவர்களிடமிருந்து இக்கடிதங்களை எடுத்து வந்திருக்கிறார்.

இக்கடிதங்களை யாழ் செயலகத்தில் உள்ள அரச அதிபர் அலுவலகத்திலிருந்து உறவினர்கள் பெற்றுக்கொள்ள முடியும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. (க)

# அகதிகள் மீது தாக்குதல் 15 பேர் காயம்

(யாழ்ப்பாணம்)

வட்டுக்கோட்டை அகதி முகாம் ஒன்றிற்குள் புகுந்த ஒரு குழுவினர் அங்கு தங்கியிருந்த மக்கள் மீது மேற்கொண்ட தாக்குதலினால் பதினைந்து பேர் காயமடைந்தனர்

காரைநகரிலிருந்து இடம் பெயர்ந்து வட்டுக்கோட்டை வள்ளியம்மை முகாமில் 59 குடும்பங்கள் வசித்து வருகின்றன. இதில் தங்கியுள்ள நபர் ஒருவருக்கும் அப்பகுதி மக்களுக்கும் இடையில் ஏற்பட்ட தகராறே இதற்கு காரணம் என தெரியவருகிறது. மேற்படி குழுவினர் அம்முகமிற்குள் புகுந்து அங்கிருந்த பெண்கள், ஆண்கள் சிறுவர்கள், குழந்தைகள் உட்பட அனைவரையும் பிடித்து கை, கால்களைக் கட்டியபின் தடி, கத்தி ஆகிய ஆயுதங்களால் தாக்கியுள்ளனர்.

மேற்படி சம்பவத்தில் காயமடைந்தோரில் ஆறுபேர் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

**பெற்றவரைப் போன்றே மாவீரர் பெற்றோரை பற்றோரும் பேணுதலே பணி**

## வரி விளம்பரம்

### கடிகாரமா? றேடியோவா?

உங்கள் கடிகாரங்கள், றேடியோக்களை உத்தரவாதத்துடன் திருத்திக்கொள்ள எம்மை நாடுங்கள். (சகல கடிகார பற்றறிகளும் எம்மிடம் உண்டு.) தரமான கடிகாரங்கள், றேடியோக்கள் நியாய விலைக்கு விற்றுத் தரப்படும். டில்கா வாச் வேக்ஸ், 284 ஸ்ரான்லி வீதி, (வானவில் கஃபார் அருகாமையில்) யாழ்ப்பாணம். கிளை: பஸ் நிலயம், சாவகச்சேரி
(சி 5399)

### பற் சிகிச்சை நிலையம்

பற் சிகிச்சை நிலையம், (கொக்குவில் இந்துக் கல்லூரிக்கு எதிரில் கே கே எஸ். வீதி, கொக்குவில்) தினசரி; 4 பி. ப. — 6 பி. ப. ஞாயிறு; 10 மு. ப. — 2 பி. ப.
(3215)

### விற்பனைக்கு

யாழ்ப்பாணம், நல்லூர் வடக்கு விநாயகர் வீதியில் வீட்டுடன் 2 1/2 பரப்பு காணி விற்பனைக்குண்டு. தொடர்பு: என். தில்லைவினாயகம் பிரசித்த நொத்தாரிசு, நல்லூர் வடக்கு யாழ்ப்பாணம்.
(சி-5430)

### விற்பனைக்கு

Robin Ey 14DX மிக நல்ல நிலையில் உள்ள நீர் இறைக்கும் இயந்திரம் உடன் விற்பனைக்கு உண்டு இருபாலை எக்ஸ்பிறஸ் கல்வி நிலையம், இருபாலைச்சந்தி சனி,ஞாயிறு நாட்களில் மட்டுமே பார்வையிடலாம். (சி- 5432)

### மாணவர்களுக்கு

பாடசாலைப் பிள்ளைகளுக்கான அப்பியாசக் கொப்பிகள், புத்தகங்கள் மலிவில் விற்பனையாகிறது. றோனியோ குறைந்த விலையில் செய்து கொடுக்கப்படுகிறது. அறிவகம் புத்தகசாலை வெலிங்டன் சந்திக்கருகாமை, யாழ்ப்பாணம். (சி-5109)

### விற்பனைக்கு

பன்டேஜ் மொத்தமாகவும், சில்லறையாகவும் விற்பனைக்கு உண்டு. ஆதவன் மருந்தகம், கைதடிச் சந்தி.
(சி-3222)

### தென்மராட்சி வாடிக்கையாளர்கட்கு

தென்மராட்சி மக்களுக்கு டில்காவின் சேவை! உங்கள் கடிகாரங்கள், றேடியோக்கள் யாவும் உத்தரவாதத்துடன் திருத்திக் கொடுக்கப்படும். சகல பற்றறிகளும் எம்மிடம் உண்டு டில்கா வாச்வேக்ஸ் பஸ் நிலையம், சாவகச்சேரி.
(சி-5400)

### சோதிடம்

ஜாதகம், எண், கைரேகை மூலம் உங்கள் எதிர்காலத்தை அதிர்ஷ்டகரமாக அமைத்துக் கொள்ள வேலணை சோதிடர் V. A. சிவராசா 52B அரசடி றோட் கந்தர் மடம் என்ற முகவரியில் சந்திக்கலாம்.
( 3669 )

### நுளம்பு குத்துகிறதா?

பொன்னின் குழல் ஊதி வந்து உங்கள் பொன்னான மேனியில் ஊசி போடுகிறதா? ஒன்று செய்யுங்கள். சாம்பிராணி புகைப்பது போல மில்க்வைற் நீம் தூபததைப் புகைத்துப் பாருங்கள். அண்ணா கோப்பிக் கடைகளிலும் கிடைக்கும். - மில்க்வைற் -
(சி-5433 )

## 24-ல் 'குமண' வரலாம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்திற்குத் தேவையான ஒரு தொகுதி அத்தியாவசிய உணவுப் பொருள்களுடன் "குமண" கப்பல் 23 அல்லது 24-ம் திகதி பருத்தித்துறையை வந்தடையும் என எதிர்பார்க்கப்படுகின்றது. (பா)

## எழுச்சி வார கருத்தரங்குகள்

(யாழ்ப்பாணம்)

மாவீரர் எழுச்சி வாரஇறுதி நாளான இன்று கருத்தரங்குகள் நடைபெறும் இடங்கள்;

வலிகாமம் கோட்டத்தில் கோப்பாய் வட்டத்தில் நீர்வேலி திலீபன் சனசமூக நிலையத்திலும் யாழ் வட்டத்தில் முலவைச் சந்தி சனசமூக நிலையத்திலும் நல்லூர் வட்டத்தில் கொக்குவில் கலைமகள் சனசமூக நிலையத்திலும் உடுவில் வட்டத்தில் தாவடி காளியம்மன் சனசமூக நிலையத்திலும், சங்கானை வட்டத்தில் சங்கரத்தை சனசமூக நிலையத்திலும் பிற்பகல் 6.30 மணியளவில் அவ்வவ் பகுதி சிற்றூர்ப் பொறுப்பாளர் தலைமையில் கருத்தரங்குகள் நடைபெற உள்ளன.

வடமராட்சிக் கோட்டத்தில் கரவெட்டி வட்டத்தில் இரவு 7 30 மணியளவில் வளர்மதி சனசமூக நிலையத்தடியில் வேந்தன் தலைமையில் நடைபெறும் கருத்தரங்கில் தணிகைச் செல்வி. அரசண்ணா ஆகியோர் உரைநிகழ்த்த உள்ளனர்

தென்மராட்சிக் கோட்டத்தில்பளை வட்டத்தில் இரவு 7.00 மணியளவில் மாசார் பாடசாலையில் தனம் தலைமையில் நடைபெறும் கருத்தரங்கில் தமிழ்மங்கை உரையாற்றவுள்ளார்.

சாவகச்சேரி வட்டத்தில் மீசாலை ஸ்ரீமுருகன் சனசமூக நிலையத்தில் இரவு 7 00 மணியளவில் அன்புடை நம்பி தலைமையில் நடைபெறும் கருந்தரங்கில் தமிழ்மங்கை உரையாற்றுவார்.

தீவகம் கோட்டத்தில் கெற்பலி பண்டிதர் குடியிருப்பில் முஸ்லிம் வட்டாரத்தில் இரவு 7 00 மணியளவில் முருகப்பன் தலைமையில் நடைபெறும் கருத்தரங்கில் சேரலாதன் கயல்விழி ஆகியோர் உரைநிகழ்த்துவர்.

கடற்புலிகளினால் வடமராட்சி வடக்கு கோட்டத்தில் முற்பகல் 10.00 மணியளவில் முனை கலட்டி றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலைக்கு அருகாமையிலும் பிற்பகல் 4.00 மணியளவில் கற்கோவளம் அமெரிக்க தமிழ்க் கலவன் பாடசாலைக்கு அருகாமையிலும் கருத்தரங்குகள் நடைபெறவுள்ளன,

> மாவீரர் எழுச்சி வாரம்
> இறுதி நாள்
> நிகழ்ச்சிகள்

## மாவீரர் எழுச்சிவார இறுதி நாள் சிரமதானப் பணிகள்

(யாழ்ப்பாணம்)

மாவீரர் எழுச்சிவார இறுதி நாளான இன்று சிரமதானப் பணிகள் மேற்கொள்ளப்படும் இடங்கள்:

தீவகம் கோட்டத்தில் முஸ்லிம் வட்டாரத்தை (முகாம் துப்புரவும், வடிகால் துப்புரவும்) திரு. முருகப்பன் தலைமையில் முகாம் மக்களால் துப்புரவு செய்யப்படவுள்ளன.

வலிகாமம் கோட்டத்தில் கோப்பாய் வட்டத்தில் கோப்பாய் வைத்தியசாலை வீதியும், பழம் வீதியும், அலன் வீதியும் கோப்பாய் சிற்றூர் மக்களால் சிரமதானம் மூலம் துப்புரவு செய்யப்படும். சங்கானை வட்டத்தில் வள்ளுவர் சனசமூக நிலைய வீதியை பரன் தலைமையில் வள்ளுவர் சனசமூக நிலைய மக்களால் துப்புரவு செய்யப்படும்

கடற்புலிகளால் வலிகாமம் கிழக்கு வட்டத்தில் அராலி மேற்கு வள்ளியம்மை வித்தியாசாலை, சரஸ்வதி வித்தியாலை சுற்றாடல் அமெரிக்க மிசன் பாடசாலை என்பனவும் வடமராட்சி கிழக்கு வட்டத்தில் மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பணிமனை சுற்றாடல் செம்பியன்பற்று அமெரிக்க தமிழ்க்கலவன் பாடசாலைசுற்றாடல், நாகர் கோயில் மகாவித்தியாலய சுற்றாடல் ஆகியன அவ்வவ் பகுதி பொதுமக்களால் சிரமதானம் மூலம் துப்புரவு செய்யப்பட உள்ளன.

## மண்ணெண்ணெய் விநியோகம்

(யாழ்ப்பாணம்)

புங்குடுதீவு நயினாதீவு பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தினால் அதன் பாவனையாளர்களுக்கு மண்ணெண்ணெய், சீனி, தீப்பெட்டி என்பன விநியோகிக்கப்படுகின்றன. பங்கீட்டு அட்டை ஒன்றிற்கு ஐந்து லீற்றர் மண்ணெண்ணெய் லீற்றர் நாற்பது ரூபா வீதமும் ஒரு கிலோ சீனி 27 ரூபா 75 சத வீதமும், ஒரு தீப்பெட்டி ஒரு ரூபா வீதமும் மேற்படி சங்கத்தின் இரு கிளைகளில் இவ் விநியோகம் நடைபெறுகிறது. (22

## விழுதுகள்

மாறுதலைப் பார்த்து இவனும் சண்டை அணியில் சேர்த்துக் கொள்ளப்படுவான். இப்படித் தான் கொக்காவில் முகாம் தாக்குதலுக்கு சென்ற அணியில் இவன் சேர்த்துக்

போர்.

உல்லாச விடுதிப் பகுதியில் சண்டையில் நின்ற திலக் கட்டைக்காட்டுக்கு செல்ல விருப்பம் கொண்டு பொறுப்பாளரிடம் கேட்ட பொழுது இவன் ஆர்வத்தைக் கண்ட அவர்

## வளர்ப்பு

மயங்கிக் கிடக்கின்றாரோ என்பதைநினைத்துக்கொள்ள, அந்த மனிதர் மனதைத் தி ப்படுத்திக்கொண்டு-

-"அதுவந்து நானும் சிவதாசுவும் தான் பிள்ளை ஒண்டா விறகு வெட்டிக்கொண்டு வர பொம்பர் ஒண்டு குண்டு போட்டது அதிலை சிவதாசுவுக்கு.." என்று வார்த்தைகளை முடிக்க முன்பு

ஐயோ என்ரை அத்தான்... என்ரை திரவியத்தை இனி என்னண்டு நான் வளர்க்கப் போறன்'

என்று தலையிலடித்து மண்

## சூறாவளி நீங்கியது

(கொழும்பு

இலங்கையில் நிலைகொண்ட இரண்டாவது சூறாவளியும் இலங்கையை விட்டு விலகிச் செல்வதாக இலங்கை வானிலை அவதான நிலையம் அறிவித்துள்ளது

சுதனை, தனது முகத்தோடு அணைப்பதற்காக தனது ஒரு கரத்தைத் தூக்க முற்பட்டான். அவனால் முடியவில்லை. அவனின் கண்கள் கண்ணீருக்குப் பதிலாக உதிரத்தை வடிந்தது. தான் உயி

## சுவடுகள்

ஷெல்லடிதுயிலெழும்பும்நாடு. நாட்டின் பொருளாதாரம், கல்வி, மின்சாரம் எல்லாம் சீர்கெட்ட நிலையில் இருளில் இருந்து கொண்டே ஒளிக்காக போராடும் நாடு பால்,வயது, இன, சமய வேறுபாடின்றி அனைவரும் சுதந்திர கீதத்தை முழங்கும் நாடு.

இந்தப் போராட்டங்களையும், அதன் உன்னதமான பெறுமானங்களையும், இதன் வரலாற்று முக்கியத்துவத்தையும் விளங்கிக் கொள்ளாமல் எந்தவொரு கலைஞனும் இருக்கமாட்டான். இக்கலைஞர்கள் போராட்டச் சூழலில் வாழ்ந்துகொண்டு நெருப்பெடுத்து எழுதுகிறார்கள் இவர்கள் எழுதுவது சத்யம். அந்த சத்ய வேள்வியில் எழும் இலக்கியங்கள் உயிர்த்துடிப்புள்ள,

## அந்தியேட்டிக் கிரியை



### காசிப்பிள்ளை முருகுப்பிள்ளை

21-11-92 இல் பருத்தித்துறையிலும், கனடாவிலும் நடைபெறும் அந்தியேட்டி கிரியையில் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

(3674)

மனைவி, மகன்,
குடும்பத்தினர்.

## நினைவு கூருகின்றோம் ...

### 1992-11-20

1984ஆம் ஆண்டு இதே தினத்தில் சாவகச்சேரியில் சிறிலங்காப் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட 5 தமிழர்கள்

1986 ஆம் ஆண்டு பருத்தித்துறைப் பகுதியில் சிறிலங்காபபடையினருடனான சமரில் விழுப்புண் அடைந்து பின்னர் மருத்துவ மனையில் வீரச்சாவெய்திய

சிவா (முருகுப்பிள்ளை சிறிகரன் ...

அணியில் இவன் சேர்த்துக் கொள்ளப்பட்டான்.

அங்கும் இவன் காட்டிய வீரம் எல்லோரும் இவன் போலவே இருக்க வேண்டும் என்று எண்ணம் எல்லோரிடமும் தோற்றுவித்தது. வீரத்திலும் விவேகத்திலும் இலட்சியத்திலும் இவன் எப்படி இவ்வளவு திறன் பெற்றான்? அது தான் ஒவ்வொரு போராளியையும் தனது பிள்ளையாக வளர்க்கும் தலைவனின் கண்காணிப்பில்வளரும் புலிகளின் திறன்.

இதனைத் தொடர்ந்து யாழ்ப்பாண மண்ணை ஏனைய பிரதேசங்களுடன் பிரித்து நிற்கும் ஆனையிறவு முகாம் முற்றுகை ஆரம்பமானது முற்றுகையின் முதல் கட்டமாக ஆனையிறவு உல்லாச விடுதி மினிமுகாம் புலிகளின் சில நிமிட தாக்குதலில் அழிக்கப்பட்டது. இத்தாக்குதலில் திலக் காட்டிய வீரமும் விவேகமும் இவனுக்கே உரியது சில நிமிட நேரத்தில் முகாம் வீழ்ச்சி அடைந்தது என்றால் அதில் சென்ற அணிகள் எவ்வளவு வேகத்தில் தாக்கியிருப்பார்கள். இதனால் முகாமுக்குள் இருந்த எதிரிகள் பயப் பீதியால் ஆட்டம் இழந்தார்கள். தமது உயிர் திரும்பாது என்னும் முடிவுக்கு வந்தனர். எமக்கு உதவி செய்யும்படி இராணுவத்தினர் இராணுவ தளபதிகளிடம் உயிர் பிச்சை வேண்டினர் இதன் காரணமாக முற்றுகையை முறியடிக்கவென்று கட்டைக்காடு பகுதியில் இராணுவம் தரையிறக்கப்பட்டது. 24மணி நேரத்தில் முற்றுகையை முறியடிப்பதாகக் கூறிக் கொண்ட இராணுவம் 24 நாட்களுக்கு மேல் போரிட வேண்டிய நிலை ஏற்பட்டது

கடற் கப்பலில் மூலம் தரையிறக்கப்பட்ட இராணுவத்தினரை எதிர் [illegible] போராளிகள் [illegible]ட்டைக்காடுப் பகுதியை நோக்கி [illegible]ந்தனர் மூண்டது [illegible]டைக்காட்டுப்

ஆர்வத்தைக் கண்ட அவர் அங்கு சென்ற அணியுடன் இவனையும் அனுப்பி வைத்தார். அங்குலம் அங்குலமா முன்னேறி வந்த இராணுவத்தினர் இவர்களின் கடும் எதிர்ப்பைக் கண்டு திணறினர்.

போருக்கெல்லாம் தாய்ப் போர் என்று கொக்கரித்தான் எதிரி. இலங்கையில் இரண்டு இராணுவங்கள் உண்டு என்று கூறும் அளவுக்கு திலக்போன்ற நிகரில்லாத வீரர்கள் காட்டிய வீரமே காரணம். இராணுவம் முன்னேறிக் கொண்டு இருந்த நேரத்தில் இடையில் உட் சென்று தாக்குவதற்காக ஓர் அணி தெரிவு செய்யப்பட்டது அத் தாக்குதலில் திலக்கும் இடம் பெற்றான்.

உட்சென்று தாக்கும் தாக்குதல்தொடங்கியதும் போராளிகளின் ஆயுதங்கள் தீப்பிழம்பாக உடபுகுந்தன எதிரி திசை தெரியாமல் ஓடினான் எம்மவர்களின் குண்டுகள் எதிரியைச் சல்லடை போட்டது. பல இராணுவத்தினர் கொல்லப்பட்டு பல நவீனரக ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டதுடன் இராணுவத்தினரின் உடல்களும் கைப்பற்றப்பட்டது. இதில் திலக் காட்டிய வீரம் இன்றும் போராளிகள் மத்தியில் பேசப்படுகின்றது. இச் சண்டையின் பின்னரும் முன்னேறி வந்த இராணுவத்துக்கு எதிராக தொடர்ந்தும் போராடினான். 22-07-1991 அன்றும் தொடர்ந்து நடைபெற்ற மோதலில் எதிரியின் ரவை பட்டு வீரமரணத்தைத் தழுவிக் கொண்டான்.

இவன் கண்ட கனவை நனவாக்க இவன் சிந்திய செங்குருதியில் சிவந்த மண்ணில் செங்கொடி ஏற்றிட ஆயிரமாயிரம் வேங்கைகள் உருவாகிக் கொண்டே உள்ளனர். வீரத்துக்கு உதாரணமான இந்த வீரனின் நினைவுகளும் அனைத்துப் போராளிகளின் இலட்சிய உணர்வுகளும் என்றும் எம்மோடு தொடர்ந்து வரும்.

என்று தலையிலடித்து மண்ணிலே புரண்டு ஒப்பாரி வைத்தாள். அவளின் நிலையைப் பார்த்த அந்த மனிதரின் கண்கள் இமைகளை ஈரமாக்கியது அவளின் வேதனைகளைத் தணிப்பதற்காக சிவதாசுவுக்கு அப்படி ஒன்றும் நடக்கவில்லை. காயப்பட்டு யாழ். பெரியாஸ்பத்திரியில் விட்டுக்கிடக்கின்றதென்பதைக் கூறிவிட்டு - சிவதாசுவின் அடையாள அட்டையை அவளிடம் கொடுத்து கனத்த இதயத்துடன் அந்த இடத்தை விட்டு நகர்ந்தார்.

கண்மணி அவசர அவசரமாக சுதனையுமழைத்துக் கொண்டு வைத்தியசாலைக்குச் செல்கின்றாள்...வைத்தியசாலையில் சனங்கள் நிரம்பி வழிகின்றது. அந்தச் சன நெரிசல்களுக்கிடையில் வேகமாக நடந்து காய வாட்டுக்குள் நுழைகிறாள். கணவன் எங்கே படுத்திருக்கிறார் என்பது அவளுக்குத்தெரியவில்லை ஒவ்வொரு கட்டிலாகத் தேடிக் கொண்டு போக அவளின் கண்களில் சிவதாசு. கால்கள், வயிறு, தலைகள் எல்லாம் வெள்ளைச் சீலைகளால் கட்டப்பட்டிருப்பதைப் பார்த்ததும்

''அத்தான்...'' எனஅடக்கி வைத்த கவலைகளை கொப்பளித்துக் கொண்டு அவனின் மார்பில் மெதுவாக முகத்தைப் புதைத்தாள். சுதனும் அப்பா... அப்பா... என்று கதறினான். இதுவரைக்கும் கண்விழிக்காமலிருந்த சிவதாசு மனைவியின் குரலைக் கேட்டதும் திடீர் எனக் கண் விழித்தான். அவனின் கண்களில் முதலில் தோன்றியது சுதனின் கலங்கிய வதனமே!..

இதுவரை காலமும் எந்த ஜீவனின் வளர்ப்புக்காக மாடாக உழைத்துக் கஷ்ரப்பட்டானோ, அந்த ஜீவன் இப்போ கண்கலங்கிக் கொண்டிருக்கும் நிலையைப் பார்க்கும்போது. அதை அவனால் தாங்கிக் கொள்ள முடியவில்லை.

ரத்தை வடிந்தது. தான் உயிருடன் தொடர்ந்தும் வாழ்வேனோ என்பது அவனுக்கே சந்தேகமாக இருந்தது

சுதனின் படிப்பு... எதிர் காலம்... அவனை எப்படி கண்மணி வளர்க்கப் போகிறாள் என்பதை நினைத்துப் பார்க்கும் போது எல்லாமே அவனுக்குச் சூன்யமாக இருந்தது.

இந்த மண்ணிலை தமிழன் தலைநிமிர்ந்து வாழமுடியாது. அவனின் ஆசைகள் என்றும் நிறைவேறப்போவதில்லை இந்த மண்ணில்இனத்துவேசம் வேரூன்றி இருக்கும் வரையும் துப்பாக்கிவேட்டுக்கள் ஒலித்த வண்ணம்தான் இருக்கும என்பதை ஆழமாகச் சிந்தித்துக் கொண்டிருக்க அவனது கண்களின் கறுத்த மணிகளை இமைகள் மெல்ல மெல்ல விழுங்கிக் கொண்டிருந்தது. மெதுவாக கண்மணி என குரலை கிளப்பி

''கண்மணி இனிச் சுதன்ரை பொறுப்பு உன்னட்டைத்தான். படிப்பு எமக்கு விடிவு தருமா என்ற சந்தேகம் எழுந்துள்ளது. எனக்கு நடந்ததைப் போல நாளைக்கு உனக்கும் நடக்கலாம் சுதனுக்கும் நடக்கலாம் அதனாலைதான்நான் உனக்கிதைச் சொல்லிறன்.

—கண்மணி, இந்த மண்ணிலை இனி பொம்மர்கள், சகடைகள் குண்டுகள் போட்டு அனியாயச் சாவுகள் தொடரக் கூடாது எங்களைப்போல ஏழைகளும் நாளை இந்த மண்ணிலை இருக்கக்கூடாது. அதுக்காகச் சுதனை நீ ஒரு வீரனாக வளத்துவிடு. எ..எ.. என்ரை இறுதியா...''

வார்த்தைகளை முடிக்க முன்பே அவனின் உணர்வுகள் நிரந்தரமாகவே நின்று விட்டது கனத்த இதயத்துடன் கணவனைப் பார்த்த கண்மணிக்கு ஒருவகை உணர்வுள் மனதினில பிழம்பாய் எழ விழிகளை அகட்டி சுதனைப் பார்த்தாள் அவளின் கண்களில் சுதன் கம்பீரமாய் வரிப் புலிச் சீருடையுடன்நின்றான்.

கியங்கள் உயிர்த்துடிப்புள்ள, கலாபூர்வமான கலாவடிவங்களைப் பெறுவது இயல்பே.

இத்தகைய போராட்டத்தின் ஒரு வெளிப்பாடாகவே இயல்வாணனின் சுவடுகள் என்ற சிறு நாவல் வெளிவந்துள்ளது.

இந்த நாவலின் கருப்பொருள் எல்லாருக்கும் நன்கு தெரிந்ததே. சத்தியசீலன் என்னும் இளைஞன் தன் சகோதரர்களையும் தாயையும் காப்பாற்ற வெளிநாடு செல்ல விளைகிறான் ஆனால் நாட்டின் நிலை தனதுமுடிவு சரிதானா? என்பதனை அடிக்கடி அவனை சிந்திக்க வைக்கிறது. அவனது நண்பர்கள் இயக்கத்தில் சேர்ந்துவிடுகிறார்கள். நீ உனது குடும்பத்தைக் காப்பாற்ற வெளிநாடு செல்கிறாய், ஆனால் எல்லாரையும் காப்பாற்ற இயக்கத்தில் சேருகிறோம்' என்று நண்பன் சத்யன் கூறும்பொழுது அவனடையும் வேதனை மிகப் பெரிது. கஷ்டப்பட்டு ஏஜென்சி மூலம் கொழும்பு சென்றவனை வவுனியாவில் இராணுவத்தினர் பிடித்துச் சித்திரவதை செய்கின்றனர்.பின்னர் அதிலிருந்து மீண்டும் கொழும்பு சென்றால் அங்கும் கைதாகி பூசாமுகாம் செல்கிறான் அங்கும் சித்திரவதை அங்கிருந்து மீண்ட பொழுது அவனுக்கு வெளிநாடு செல்லும் ஆசைபோய், ஈழத்தமிழ் நாட்டிற்கு திரும்பும் எண்ணம் எழுகிறது.

இந்தநாவல் பல விதகட்டங்களில் 'விவரணநாவல்' வடிவத்தைப் பெறுகின்றது. ஈழத்தின் வடபகுதியைச் சித்தரிக்கும் நிலை மிகத்தெளிவாக ஈழம்வாழ் மக்களின் அன்றாட வாழ்வியலை பேரினவாதஇராணுவத்தின் தாக்குதல்கள் எவ்வாறு சிதைக்கின்றன என்பதனை யதார்த்தபூர்வமாகச்

(5 ஆம் பக்கம் பார்க்க)

**சிவா** (முருகுப்பிள்ளை சிறிதரன் - ஆலடி ஒழுங்கை வல்வெட்டித்துறை)

1987 ஆம் ஆண்டு இந்தியப் படையினரால் படுகொலை செய்யப்பட்ட பெண்குழந்தை, தந்தை,

அச்செழுவில் இந்தியப்படையினரால் படுகொலை செய்யப்பட்ட தமிழ்ப் பொதுமகன்

1988 ஆம் ஆண்டு அம்பாறையில் இந்தியப் படையினரால் சுட்டுக்கொல்லப்பட்ட எமது ஆதரவாளர்கள் மூவர், மற்றும் இரண்டு தமிழ்ப் பொதுமக்கள்.

1990 ஆம் ஆண்டு மாவிட்டபுரம்பகுதியில் சிறிலங்கா இராணுவததினருடனான சமரில் வீரச்சாவெய்திய

**நேசன்** (குலசேகரம் முரளிதரன் - நீர்வேலி வடக்கு, யாழ்.)

கீரிமலைப் பகுதியில் சிறிலங்காப்படையினருடனான சமரில் வீரச்சாவெய்திய

**சோபன்** (கதிரன் ராஜ்தமார் - தெய்வங்கேணி வீதி, சரசாலை வடக்கு, யாழ்)

கிளிநொச்சி-ஆனையிறவில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய

**விக்னா** (தனபாலசிங்கம் மகேந்திரகுமார் - அல்லாரை தெற்கு, மீசாலை,கொடிகாமம் யாழ்.)

யாழ். உரும்பராய்ப் பகுதியில் சிறிலங்காப்படையினர் மேற்கொண்ட விமானத்தாக்குதலில் கொல்லப்பட்ட வயோதியத் தம்பதியர்.

1991-ம் ஆண்டு கிளிநொச்சி- பூநகரி, பள்ளிக்குடா முகாமிலிருந்து வெளியேறிய சிறிலங்கா இராணுவ தினர் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலின் போது ஏற்பட்ட சமரில் வீரச்சாவெய்திய-

**நாதன்** (பா. சிவராஜ் - இன்ஸ்பெக்டர் ஏத்தம், பொத்துவில் - அம்பாறை)

**சாந்தன்** (அ. சாந்தலிங்கம் - கோயில் போரதீவு- மட்டக்களப்பு)

**ஜேக்கப் அருணா** சிவபாதசுந்தரன் சர்மிலன்- அத்தாய், பூநகரி - கிளிநொச்சி)

**கப்டன் றமேஷ்/தர்மன்** (றமணன் - யாழ்ப்பாணம்)

மட்டக்களப்பில் - மகிழடித்தீவில் சிறிலங்காஇராணுவத்தினாரற் சுட்டுக்கொல்லப்பட்ட, பண்டாரிய வெளி, படையான்வெளிகிராமசேவகரும்,கொக்கட்டிச்சோலைப் படுகொலைகள் பற்றி விசாரணை செய்த 'ஜனாதிபதி ஆணைக்குழு' முன் சாட்சியமளித்தவருமான தமிழ்ப் பொதுமகன். (விஜயரட்ணம்- மகிழடித்தீவு - மட்டு.)

ஆகியோரை இந்நாளில்

நினைவு கூருகின்றோம்

**தமிழீழ விடுதலைப் புலிகள்**

[சி/5426]




இந்திய இராணுவம் எமது மண்ணை ஆக்கிரமித்து பல அழிவுகளை செய்து கொண்டிருந்த காலம். வீதிகள் ஒழுங்கைகள் எங்கு பார்த்தாலும் வெறிநாய்களின் வேட்டை. அமைதிப்படை என்று வந்து குழந்தைகள், பெண்கள் என்ற வேறுபாடு இன்றி தமிழீழ மண்ணை அழித்து அட்டகாசம் செய்து கொண்டிருந்த காலம். எமது மக்களை காக்க என்று சொல்லி இந்த மண்ணில் வந்தவர்கள் எமது மக்களையும் கலை, பண்பாட்டையும் அழிப்பதைக் கண்டு சிறுவர் முதல் பெண்கள் வரை எமது மண்ணைக் காக்க எழுந்தனர்.

சிறு வயதில் இருந்தே துடிப்புடன் எந்தக் காரியத்தையும் துடிப்புடன் செய்யும் கிருஸ்ணவரதன் என்ற இயற்பெயர் கொண்ட இவன், கடலால் சூழப்பட்ட வல்வெட்டித்துறையில் ஆதிகோவிலடி என்னும் கிராமத்தில் சேதுலிங்கம் வள்ளியம்மா தம்பதிகளின் மூத்த மகனாக 10-09-1972 இல் பிறந்தான்.

இவன் 17-01-1989 இல் புலிகளுடன் தன்னை ஒரு முழு நேர உறுப்பினராக இணைத்துக் கொண்டான். புலிகளின் கானகப் பாசறை பல புலிகளை இந்த மண்ணில் உருவாக்கிவிட்ட மணலாறு பயிற்சி முகாமில் பயிற்சி எடுப்பதற்காக அனுப்பப்பட்டான்.

இங்கு 'திலக்'' என்ற பெயருடன் பயிற்சியைத் தொடங்கிய இவன் பயிற்சியில் மிகவும் கட்டுப்பாட்டுடனும், திறமையுடனும் நடந்து கொண்டான். இதனால் பல தடவைகள் முகாம் பொறுப்பாளராலும், பயிற்சி அளித்த ஆசிரியர்களாலும் வெகுவாகப் பாராட்டப்பட்டு வந்தான்.

எந்த வேலையைக் கொடுத்தாலும் முக மலர்வுடன் ஏற்று அதைச் செய்து முடிப்பதில் இவனுக்கு நிகர் இவனே தான். காட்டுப் பகுதியில் உணவுப் பொருள்களில் இருந்து சகல விதமான பொருள்களையும் தலையில் சுமந்தே செல்ல வேண்டிய நிலை. தூர இடங்களில் இருந்து பொருள்களை எடுத்து வருவதானால் பொறுப்பாளரால் தெரிவு செய்யப்படும் குழு திலக்கின் குழுவாகவே இருக்கும்.

அவன் தான் சோர்வின்றி தனது குழுவில் தன் குழுவில் உள்ளவர்களை மெல்லாம் பாட்டாலும் பகிடிப் பேச்சாலும் சிரிக்க வைத்து வேலைகளை களைப்பின்றிச் செய்யும் திறமையுடையவன். பயிற்சி முகாமில் நடைபெறுகின்ற கலை நிகழ்ச்சிகளில் திலக் இல்லாமல் இருக்காது ஏதாவது ஒரு நிகழ்ச்சியிலேனும் அவன் பங்கு இருக்கும். அப்படி இல்லாவிட்டால் சக போராளிகள் கட்டாயப்படுத்தி 'திலக் அண்ணை மேடையில் ஏறுங்கோ'' ஒரு பாட்டென்றாலும் கட்டாயம் பாட வேண்டும் என்பார்கள், அவர்களின் அன்புக்காக பாடுவான்.

இவனுடைய ஒவ்வொரு அசைவும், பேச்சும் ஒரு முழுமையான விடுதலைப் போராளிக்கு உரியவை ஆகவே இருக்கும். எப்போ எடுத்தாலும் தனது குழுவில் உள்ளவர்களிடம் மச்சான் சண்டை பிடிக்க வேணும், ஆமிக்கு நாம் யார் என்று காட்ட வேண்டும் என்று பேசிக்கொள்வான்.

பயிற்சிக் காலத்தில் இப்படி விடுதலை உணர்வுடன் இருந்து திலக் பயிற்சியை முடித்து வெளியே வந்தான் பயிற்சியில் இவன் காட்டிய திறனும் போராட்ட உணர்வும் ''எமது வெற்றிக்கு'' கடுமையான பயிற்சியும் மன உறுதியும் தான் காரணம் என்ற தலைவரின் கூற்றுக்கு அமைய மேலும் பயிற்சி எடுக்க விரும்பிய இவனை வயதில் சிறியவனாக இருந்தாலும் இவன் திறமையையும் ஆர்வத்தையும் கண்டு மேலதிக பயிற்சிக்கும் அனுப்பப்பட்டான். அங்கும் இவன் முதன்மை மாணவனாக இருந்து பலபேரின் பாராட்டைப் பெற்றான்.

இப் பயிற்சியையும் முடித்து வெளியே வந்த நேரத்தில் இரண்டாவது ஈழப்போர் ஆரம்பமானது. இதனைத் தொடர்ந்து இன அழிப்பில் ஈடுபட்டு வந்த சிங்கள வெறியர்களின் முகாம்களை அழித்திட புலிகள் செயற்பட்டு வந்தனர். இதன் முதல்படியாக கொண்டச்சி இராணுவமுகாம் தகர்ப்பு இடம் பெற்றது. இத்தாக்குதலில் திலக்கின் பங்கு அளப்பெரியது. தாக்குதல் தொடங்கியது ஒரு பக்கமாக திலக் நின்ற அணி எதிரியின் முகாமுக்குள் புகுந்து அவனை அழிக்க வேண்டும். புலிகளின் கரங்களில் இருந்த துப்பாக்கி நெருப்பைக் கக்கிய வண்ணம் முன்னேறிச் சென்றது. திலக்கின் துப்பாக்கி மின்னலாக சுழன்றது. அதில் எதிரிகள் பலர் கண் முன்னே விழுந்தனர் முதலாவதாக இவன் சென்ற அணியே முகாமுக்குள் புகுந்தது. பல ஆயுதங்களுடன் பவள் கவச வாகனம் ஒன்றும் புலிகளால் கைப்பற்றப்பட்டது.



லெப்டினன்ட்
**திலக்**

இதனைத் தொடர்ந்து பரந்தன் பக்கமாக முன்னேற முயன்ற இராணுவத்தினர் மீது கடும் தாக்குதல் தொடுக்கப்பட்டது. இதில் இவன் காட்டிய வீரம் இவனோடு களம் சென்ற அனைத்து போராளிகளையும் ஒரு கணம் சிந்திக்க வைத்தது. சண்டை முடிந்து முகாம் திரும்பியதும் இங்கு வராமல் தொடர்ந்து சண்டை செய்து கொண்டு இருக்க வேண்டும் என்று கூறிக் கொண்டு இருந்தான்.

சண்டையில் இவன் காட்டும் வீரமும் துணிச்சலும் எல்லோரையும் இவன் பக்கம் ஈர்த்தது. எல்லோருக்கும் முன் உதாரணமாக திலக் செயற்பட்டான் சண்டைக்கு போராளிகளை தெரிவு செய்யும் போது இவன் பெயர் இடம்பெறாவிட்டால் எதற்கும் முகம் சுளிக்காத இவன் முகம் சுளிப்பான் யாருடனும் பேசமாட்டான் ''இவ்வளவு பேரும் சண்டைக்கு போக நான் மட்டும் இங்கு நிற்பதா'' என்றுகூறிக் கொள்வான். இவனின் இந்த

[2ஆம் பக்கம் பார்க்க]

**மதிப்புரை**

# சுவடுகள்

இயல்வாணன்

புரட்சி வரும் போது
எழுப்பி விடுங்கள்

அதுவரை கொஞ்சம்
தூங்கிக் கொள்கிறேன்.

—புவி (யரசு) வானம்பாடி கவிமடல் ஏழு—இல் எழுதிய பொழுது அதிர்ச்சியாக இருந்தது புரட்சி என்றால் என்ன? அதனைப் புயல் தோற்றம் கொள்ள வைப்பவர்கள் யார்? அதில்எழுத்தாளர்களின் பங்கு என்ன? — என்பது பற்றிஆக்கபூர்வமான சிந்தனையற்றவர்களாக, ''புரட்சி'' என்ற சொல்லை உச்சரிப்பதாலேயே தாமும் புரட்சியாளர்களிடையே ஒருவராகி விட்டோம் என சுய இன்பம் காண்பவர்களாகவே இருந்திருக்கிறார்கள். கவர்ச்சித்தலைப்புகளாக 'என்னை நீங்கள் போராளியாக்கினீர்கள்', 'என்னைக் கம்யூனிஸ்ட் ஆக்கினீர்கள்' —என்றெல்லாம் வார்த்தைகளாடி, புரட்சிகளையும், போராட்டங்களையும் கொச்சைப்படுத்தினார்கள். ஆனால் இவர்கள் ஒன்றை மனதில் கொண்டிருந்தார்கள். 'புரட்சியோ, போராட்டமோ' வரப் போவதில்லை. நாமும் துப்பாக்கி ஏந்தவோ, இரத்தம் சிந்தவோ போவதில்லை. ஆதலால் வார்த்தைகளுக்குச் சூடேற்றி 'கற்பன லோகப் புரட்சிகளில் இரத்தம் சிந்தினர்' ஆனால் நிதர்சன உண்மைகளைத் தரிசித்தார்களில்லை.

வியட்நாம், ஆப்கானிஸ்தான், பங்களாதேஷ்- விடுதலைப் போராட்டங்களைப் பற்றி பக்கம்பக்கமாக எழுதிய தென்னக ஜெயகாந்தன், நா. பார்த்தசாரதி, துக்ளக் சோ போன்றவர்கள் ஈழத்து தனிப்பெருங்குடிகளான தமிழ் மக்களின் 'இனவிடுதலை' மண்மீட்புப் போரினை அயலிலிருந்தும் அந்தக உணர்வுடன் யானையைப் பார்த்துப் பிரமிக்கின்றார்கள். இது இத்தகையோரின் சர்வதேச அரசியல் அறிவின் சூன்யத்தைக் காட்டுகிறது.

செம்பியன்செல்வன்

விடுதலைப் போரின் பெருமையை உணராதவர்கள் ஓரினத்தின் விடுதலை வேட்கையைத் தெரிந்துகொள்ளாதவர்கள், போரின் அழிவையும் சிதைவையும் இழப்புகளையும் அறிந்திராதவர்கள். ஆனால்- தமிழீழத்தின் நிலையோ முற்றிலும்வேறானது. 'இனம், மண்' இரண்டினது மானத்திற்காக, விடிவுக்காக நாடோறும் போராடிக் கொண்டிருக்கும் நாடு. பூபாள ராகமென

(2ஆம் பக்கம் பார்க்க)

# அகதி முகாம்கள் கூறும் சோகக் கதைகள்



காணியை சிபார்சு செய்தார் என்று ஊர் மக்கள் சொல்கிறார்கள்.

மற்றது சந்தி முகாம். இங்கு சுமார் 71 குடும்பங்கள் 42 கொட்டில்களில் வாழ்கிறார்கள். மானிப்பாய் புனித அந்தோனியார் முகாமில் 475 பேர் கொண்ட 97 குடும்பங்கள் 57 குடிசைகளில் அடைக்கப்பட்டுள்ளார்கள், இங்குள்ளவர்களில் பத்துப் பேருக்கு தமிழ் அகதிகள் புனர்வாழ்வுக் கழகம் சுயதொழிலை ஊக்குவிக்கும் வகையில் தலா 2000 ரூபா தருவதாகத் தெரிவிக்கப்பட்டது ஆனால், இப்போது பத்து ஐந்தாக மாறியிருப்பதாக இந்த முகாமில் உள்ளவர்கள் தெரிவிக்கிறார்கள்.

மானிப்பாய் யோகன் முகாமில் 137 பேர் கொண்ட 28 இடம் பெயர்ந்த குடும்பங்கள் 18 குடிசைகளில் சீவியம் செய்கிறார்கள். மானிப்பாய் பிப்ப

குண்டும் குழியுமான காணிகளில் முகாம்கள் அமைக்கப்பட்டுள்ளன மாரியின் ஆரம்பமே இப்படியென்றால் மழை அடைத்தால்என்ன வாகுமோ?

★ அடிப்படை சுகாதார வசதிகள் உரிய முறையில் வழங்கப்படவில்லை. நோய் வருவதற்கு முன் தடுப்பதற்கான நடவடிக்கைகள் உரிய முறையில் மேற்கொள்ளப் படுவதாகத் தெரியவில்லை பரல் மலசல கூடங்கள் மழை நீரினால் நிரம்பி வழிந்து அந்தநீர் சுற்றாடலில் பரவுவதால் சூழல்பெரிதும்பாதிப்புக்குள்ளாகும் என்று அஞ்சப்படுகிறது. உதாரணமாக மலசலம் நீருடன் கலந்து தோட்டத் துரவுகளில் பரவியதால் மானிப்பாயில் ஒரு பொன்னாங்காணித் தோட்டத்தையே முற்றாக அழிக்க வேண்டியதாயிற்று. அ

இளவாலை, பண்டைத்தரிப்பு, மாதகல் ஆகிய கிராமங்களிலிருந்து இராணுவ அனர்த்தங்களால் வெளியேறிய மக்கள் குடியமர்த்தப்பட்ட முகாம்கள் எவ்வளவு பயன் பொருத்தமற்றவை என்பதனை அண்மையில் பெய்த மாரிமழை உணர்த்தியுள்ளது. நவாலி முதல் மானிப்பாய். அதற்கப்பால் கட்டுடை வரையிலும் பரவியுள்ள அகதி முகாம்கள் மழை வெள்ளப் பெருக்கால் கோரமான பாதிப்புக்களுக்கு உள்ளாகியிருக்கின்றன. இதற்கு மௌனச் சாட்சியாக நவாலி, மானிப்பாய் பகுதி முகாம்களே உள்ளன.

யாழ். குடாநாட்டில் ஏனைய பகுதிகள் தவிர்ந்த மானிப்பாய் - நவாலிப் பகுதியில் மட்டிலும் அமைந்துள்ள முகாம்களுக்கு கடந்த வாரத்தில் பெய்த மழையின்போது விஜயம் செய்தோம். இப்பகுதியில் அரச சார்பற்ற மற்றும் மனிதநேய ஸ்தாபனங்கள் சில தமது 'புகழை' நிலைநாட்டக் கூடிய வகையில் அல்லது பெயரளவில் சீதோஷ்ண ஏற்ற இறக்கங்களைகருத்தில் கொள்ளாது முகாம்களை அமைத்துள்ளன. திட்டம் எதுவும் இல்லாமல் குடிசைகளை அமைக்கும் முயற்சியில் சில அமைப்புக்கள் செயற்பட்டுள்ளன.

ஒட்டுமொத்தமாகப் பார்க்கும்போது மானிப்பாய்-நவாலிப் பகுதிகளிலுள்ள எல்லா இடம்பெயர்ந்தோர் முகாம்களும் விமர்சனத்துக்குரியவையே.

ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம் என்பது போல சிலமுகாம்கள் தொடர்பான தகவல்களைத் தருகின்றோம்.

★ நவாலி மகா வித்தியாலயத்தில் ஓர் இடம்பெயர்ந்தோர் முகாம் இங்கு 45 குடும்பங்களுக்கு புகலிடம் வழங்கியுள்ளார்கள் முகாம்களுக்கெல்லாம் கொத்தணிபோல் இது அமைந்துள்ளது. சிறிய மண்டபமொன்றில் பாடசாலைக் காலை நிகழ்ச்சிகள் திருவிழாவாக நடைபெறுகின்றன. அடாது மழை பெய்தாலும் விடாது நாடகம் நடத்தப்படும் என்பதினை விழாவின் பூரிப்பு நிருபிக்கின்றது. இரவு பெய்த மழையில் நனைந்த கூடத்தின் ஒரு பகுதியிலும்பள்ளிக்கூடக் கட்டட வெளிச் சுவர்களை ஒட்டிய தாழ்வாரத்திலும் இடம்பெயர்ந்து வித்தியாலயத்திலும் புகலிடம் நாடியவர்கள் மொய்த்து நிற்கின்றனர். விழாவின் சலசலப்பு இவர்களைப் பாதித்ததாகக் கூறுவதற்கில்லை.

45 குடும்பங்களுக்குப் பத்து அடுப்புகள். காலையில் அடுப்பு மூட்டிய சுவடுகள் தென்படவில்லை. இரவில் பெய்த மழையினால் நனைந்த அடுப்பில் பூனை கூடப் படுக்காது. மழை இப்போது சற்றுத் தணிகிறது சமைக்க ஆரம்பிக்கிறார்கள். தாழ்வாரத்தில் அமைக்கப்பட்டுள்ள இந்த அடுப்புக்களில் சுழற்சி முறையில்தான் சமையல். இத்தனை குடும்பங்களுக்கும் இரண்டு மலசல கூடங்கள் மட்டும் உள்ளன. இந்த இரு மலசல கூடங்களையும் பாடசாலை வேளைகளில் பாவிப்பதற்குத் தடை உத்தரவு. குடிநீர் மொள்ள வயல் பக்கம் போகவேண்டும் வயலில் விதைத்துவிட்டார்கள். வயல்பக்கம் வரவேண்டாம் என்று வயல் உரிமையாளர்கள் தடைபோட்டிருக்கிறார்கள் என்று இடம்பெயர்ந்தோர் சொல்கிறார்கள்.

இந்த முகாமில் அநேகர் கடற்றொழிலாளர்கள். சில்லாலை, சாந்தை கிராமவாசிகள். கிராம சேவையாளரிடம் சென்றால் உதவி அரசாங்கஅதிபரைச் சாட்டுகிறார் உதவி-அரசாங்க அதிபரிடம் சென்றால் கிராம சேவையாளரிடம் போகும்படி பணிக்கிறார். இடம்பெயர்ந்து வாழும் இவர்கள் கடற்கரைத் தாளங்காய் போல் அலைகிறார்கள்.

சிறுவர்கள் பாடசாலை ஒதுக்குப் புறத்தில் மலசலம் கழிப்பதைக் காணக்கூடியதாக இருந்தது. இதனைத்தவிர வேறென்ன வழி என்பது முகாம் பொறுப்பாளர் களுக்குத்தான் வெளிச்சம். நவாலி முகாமிலிருந்து விடைபெற்றுக்கொள்கிறோம்.

> நோய்நொடி, அடிப்படைச் சுகாதார வசதியின்மை, போசாக்கின்மை, அதிகாரிகள் பாராமுகம், இயற்கையின் அனர்த்தங்கள், தொழிலின்மை ஆகியவற்றுடன் மல்லுக் கட்டுவது அகதி முகாம்களில் உள்ள மக்களின் வாழ்க்கையில் அங்கமாகி விட்டன. மனிதநேய ஸ்தாபனங்கள் சுறுசுறுப்பாகப் பணிகள் நடைபெறுவதாகச் சொல்கின்றன. பெயரளவில் அல்லது பெயருக்குத்தான் எல்லாம். இதற்கு மௌனச் சாட்சியாக முகாம்களே உள்ளன.

★ நவாலி அமெரிக்க மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலை முகாம் சென்றோம். வகுப்பாசிரியர் கரிசனையுடன் சுமார் ஐம்பது மாணவர்களை ஒன்றுசேர்த்து ஒரு பாட்டு-

பூனைக்கும் பூனைக்கும்
கல்யாணமாம் — இந்த
பூலோகமெல்லாம் கொண்டாட்டம்
ஆனைமீது ஊர்கோலமாம்
அப்புறம் அழகான
சாப்பாடாம்.

இந்த வகுப்பிலுள்ள இடம் பெயர்ந்த பிள்ளைகளுக்கு மதிய உணவுவிற்கு உத்தரவாதமில்லை. சமையல் கூடு சேறும் சகதியுமாகக் காணப்பட்டது. சமையல் செய்யும் முயற்சி கைகூடவில்லை. குசினி சுயமுயற்சியால் கட்டப்பட்டு ஐதாக வேயப்பட்டுள்ளது. குசினி கட்டித் தருவதாக அதிகாரிகள் சொன்னார்கள். ஆனால் அது வெறும் கதை என்கிறார்கள். இடம்பெயர்ந்தவர்கள் மலசல கூடம் அமைப்பதற்கு மூன்று பரல்கள் தரப்பட்டுள்ளன. மூன்று மாதங்களாக அப்படியே கிடக்கின்றன. மண்வெட்டி, அலவாங்கு இல்லாமல் பரல்களை எப்படி நிலத்தில் புதைப்பது என்கிறார்கள் இடம்பெயர்ந்தோர். எப்படியாயினும் மழை நீரூற்றால் ஆழமாக வெட்டும் முயற்சி இந்த மாரியில் கைகூடாது.

இந்த முகாமில் உள்ளவர்கள் அமெரிக்கன் மிஷன்தேவாலய மலசல கூடத்தைப் பாவித்து வந்தவர்கள். ஆனால்தற்போது இதற்கான அனுமதி மறுக்கப்பட்டுள்ளது. இவர்கள் கழிவகற்றுவதற்கு தோட்டப் பக்கம்தான். குடிப்பதற்குத் தவிர வேறு தேவைகளுக்குத் தண்ணீர் எடுப்பதையும் மிஷன் தடுத்திருப்பதாக அங்குள்ளவர்கள் தெரிவித்தனர்.

★ எதிர்த்தால்போல் மகேசன் முகாம். 53 குடும்பகளுக்கு 33 கொட்டில்கள். பண்டைத்தரிப்பு, இளவாலை, மாதகல், சில்லாலையைச் சேர்ந்த கூலித் தொழிலாளர்கள் கடற்றொழிலாளர்கள், மேசன் சீவல்தொழிலாளர்கள் இங்கு இடம்பெயர்ந்து வாழுகின்றனர். ஏனோதானோ என்று குடிசைகள் போடப்பட்டுள்ளன. கப்புகள் ஆழமாகப் போடப்படாததால் குடிசைகள் சில சாயும் நிலையில் உள்ளன. முகாமைஅடைவதற்குப் பாதையில்லை. சும்மாதொடுகிற மூக்கைச் சுற்றித்தொடவேண்டும். கிணறு உள்ளது, கப்பி - கயிறு வழங்கப்படவில்லை. கழிவகற்றுவதற்கு அருகில் உள்ள வெறும் காணியைத்தான் பயன்படுத்துகிறார்கள். இம்முகாமிலுள்ளவர்கள் அருகில் உள்ள வீடுகளுக்கு நீர்த் தேவையைப் பூர்த்தி செய்வதற்குச் சென்றால் குடியிருப்பவர்கள் அனுமதிப்பது குறைவு.

★ அடுத்தது நவாலி அதிகாரி முகாம். இந்தமுகாமில் இடம்பெயர்ந்தோர் குடியேற்றம் அரச அதிகாரிகளால் நடைபெற்றதாக முகாமில் உள்ளவர்கள் தெரிவிக்கிறார்கள். மானிப்பாய் இந்துக் கல்லூரியிலிருந்து இந்த முகாமில் குடியேற மறுத்த ஒருவரை அரச அதிகாரி [கிராம சேவையாளர்] தாக்கிக் காயப்படுத்தினார் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இங்கு சுமார் 44 குடிசைகளில் 74 குடும்பங்கள்முகாம் அமைந்துள்ள இடத்துக்கு மக்கிக்கிடங்கு என்பது பெயர். இது நீர் தேங்கிநிற்கும் பள்ளக் காணி என்று ஊர் மக்கள் சொல்வதையும் பொருட்படுத்தாமல் கிராமசேவையாளர் முகாம் அமைப்பதற்குக்

கிறார்கள். மானிப்பாய் [illegible] லிச் சுடலைக்கு அருகில்உள்ள தென் இந்தியச் திருச்சபை முகாமிலும் முகாரி இராகம் தான்.

இடம்பெயர்ந்தோர் முகாம்களில் மக்கள் இனி வாழ்வதா இல்லையா என்பதை வர்ணபகவான் தீர்மானிக்க வேண்டும் என்று ஊரில் உள்ள பெரியவர்கள் தெரிவிக்கிறார்கள்,

> அண்மையில் பெய்த மழை காரணமாகச் சீரழிந்த (நவாலி - மானிப்பாய்) அகதி முகாம்களுக்கு விஜயம் செய்த எமது நிருபர் ம. நிமாலின் செய்தியறிக்கை.

ஒட்டு மொத்தமாகப் பார்த்தால் நோய் நொடி அடிப்படைச் சுகாதார வசதியின்மை போஷாக்கின்மை அதிகாரிகள் பராமுகம், இயற்கையின் அனர்த்தங்கள், தொழிலின்மை ஆகியவற்றுடன் மல்லுக்கட்டுவது அகதி முகாம்களில் உள்ள மக்களின் வாழ்க்கையில் அங்கமாகிவிட்டன மனித நேய ஸ்தாபனங்கள் சுறுசுறுப்பாக பணிகள் நடைபெறுவதாகச் சொல்கிறார்கள். பெயரளவில் அல்லது பெயருக்குத்தான் எல்லாம் இதற்கு மௌனச் சாட்சிகளாக அகதி முகாம்களே உள்ளன.

★ முகாம்கள் திட்டமிட்டு அமைக்கப்பட்டதாகக் தெரியவில்லை. முகாம்களை அமைக்கும் போது குறுகிய கால அல்லது நீண்ட கால இலக்கு கவனத்துக்கு எடுத்துக் கொள்ளப்படவில்லை. ஏதோ 'கடமை'க்கு செய்த காரியம் போல் முகாம்கள் அமைக்கப்பட்டுள்ளன. குடிசைகளின் கூரைகள் ஐதாக வேயப்பட்டுள்ளன. பள்ளமும்,

[illegible]

வேண்டியதாயிற்று. அகதி முகாம்களில் மலேரியா, வயிற்றோட்டம், இருமல், ஜுரம் ஆகிய நோய்கள் காணப்படுகின்றன,

★ சுய தொழில் வாய்ப்புகளுக்கான ஊக்குவிப்பு வசதிகள் செய்து தரப்படவில்லை. சிறு கைத்தொழில் செய்து சம்பாத்தியம் செய்யக் கூடியவர்கள் முகாம்களில் இருப்பதை அவதானிக்க முடிகிறது. இதற்கான ஒருங்கிணைக்கப்பட்ட ஒரு செயற்திட்டம் முகாம்களில் இல்லை.

★ போஷாக்கின்மை பெரும் பிரச்சினையாகவே உள்ளது. ''வெள்ளை அரிசியும் மாவும்சத்துணவாகுமா?'' என்கிறார் முகாமில் வாழும் ஒருவர். மகப்பேற்றை எதிர்நோக்கும் தாய்மார்களுக்குக் கூட போஷாக்குள்ள உணவுகள் தரப்படவில்லை.

★ சிறார்கள் கல்வி கற்பதற்கு போதிய வசதிகள் செய்து தரப்படவில்லை, அமைக்கப்பட்ட பாலர் பாடசாலைகளும் ஒழுங்கான இடத்தில் அமையவில்லை. முகாம்களில் ஆரம்பக்கல்வி கவனிக்கப்படுவதாகத் தெரியவில்லை இடம் பெயர்ந்த மாணவர் பலருக்கு பாடசாலைகளில் கூட முழுமையாக இடம் ஒதுக்கப்படவில்லை.

★ பெண்களின் பிரத்தியேகமான தேவைகளுக்கேற்ப வசதிகள் செய்து தரப்படவில்லை, இதனால் பெண்கள் சிரமத்தை எதிர்நோக்க வேண்டியுள்ளது.

★ முகாம்களில் தேவைகள் மற்றும் ஆற்ற வேண்டிய பணிகளை இணைத்து அமுல்படுத்தப்படும்முறை பலவீனமாக உள்ளதாகவும், சுற்றாடல் பேணப்படவில்லை என்றும், நாம் சந்தித்த சமூக சேவையாளர் ஒருவர் கவலை தெரிவித்தார்.

# சமன் தெய்யோவிடம் ஒரு முறையீடு

## நிலாந்தன்

நவம்பர் 15, ஞாயிற்றுக்கிழமை, 1992.

றோஸ் மீற் பிளேஸ். இரவு பத்து மணி.

மழை தூறிக் கொண்டிருந்தது.

திருமதி சிறிமாவோ படுக்கையில் நித்திரையின்றிப் புரண்டு கொண்டிருந்தார். கொஞ்சக் காலமாக இப்படித்தான் நிம்மதியான நித்திரையில்லை. கொஞ்ச நேரம் நித்திரை கொள்ள முடிந்தாலும் பயங்கரமான கனவுகள் வந்து நித்திரையை முறித்து விடுகின்றன. பெரும்பாலும் ஒரு இராட்சத நண்டு தனது விசக் கொடுக்குகளைவிரித்தபடி கனவுகளில்வருகிறது. சில சமயங்களில் நண்டிற்கு மனித முகம் காணப்படுகிறது. அந்தமுகம் இவருடைய ஒரே புதல்வன் அநுராவினுடையது போலவும் இருக்கிறது. சில சமயங்களில், கனவுகளில் தயான் ஜயதிலகாவும், சண்டே ஒப்சேவரின் காட்டூனிஸ்ட் ஒப்பாதாவும் வருகிறார்கள் இவருடைய கைகளிலும் கூரான ராட்சத பேனாக்கள் காணப்படுகின்றன. அவற்றால் இவருடைய விழிகளை அவர்கள் குத்த முனைகிறார்கள். பேனாக்களின் கூர் முனைகள் விழிமணிகளைத் தொடும் நேரத்தில் அச்சத்தால் நித்திரை முறிந்து விடுகின்றது...

இப்படியாக நித்திரையின்மைக்கும் அல்லது நித்திரையில் வரும் தீய கனவுகளிற்கும் ஜனாதிபதி ஏவிவிட்ட பேய்கள் காரணமாக இருக்கலாமோ என்றும் சிறிமாவோ சிந்திப்பதுண்டு. ஜனாதிபதிக்கு நெருக்கமான மலையாள மாந்திரீகர்களை பற்றி பொதுவாக எதிர்க்கட்சிகளிடம் வெளியில் சொல்லத் தயங்கும் அச்சம் ஒன்று காணப்படுகிறது. ஜனாதிபதியைக் கவிழ்ப்பதற்காக மேற்கொள்ளப்பட்ட எல்லா எத்தனங்களும் தோல்வியில் முடிவடைந்து விட்டன. தன்னுடைய மாந்திரீகர்களின் உதவியோடு அவர் எல்லாக் கண்டங்களையும் அநாயாசமாகக் கடந்து வந்து விட்டார் என்றே கருத வேண்டியுள்ளது. கடந்த வருடம் நம்பிக்கையில்லாத் தீர்மானம் தோல்வியுற்றது. இவ்வருடம் ''ஜன கோஷம்'' எதிர்பார்த்த வெற்றியைத் தரவில்லை. 'பாதயாத்திரா', 'ரதயாத்ரா' எல்லாமே தோல்விதான். சில மாதங்களிற்கு முன்பு மிகவும் ஆவலோடு எதிர்பார்க்கப்பட்ட ஜனாதிபதித் தேர்தல் ஆட்சேப மனுவின் மீதான தீர்ப்பும் படுமோசமான தோல்வியாகி விட்டது. போதாக்குறைக்கு வழக்குச் செலவும் கட்டும்படியாயிற்று. எதிர்க்கட்சிகளிற்குக் காலம் சரியில்லைப் போலிருக்கிறது, இந்நிலையில் ஜனாதிபதியின் மாந்திரீக ஆலோசகர்களைத் தோற்கடிப்பதற்கு ஒரே வழிதான் இருந்தது. எதிர்க்கட்சிகளிற்கு அந்த ஒரு வழியைத் தவிர வேறுஅரசியல் இருக்கவில்லை. ஜனாதிபதிக்கு எதிராக சமன் தெய்யோவிடம் முறையிடுவது என்று எல்லோருமாகத் தீர்மானித்தார்கள். கோட்டை பரகும்ப பிரிவெனாவிலிருந்து இரத்தினபுரி வரையிலுமான அறுபத்தியிரண்டு மைல்கள் தொலைவிற்கு ஆதரவாளர்களின் மனிதச் சங்கிலி அணிவகுப்போடு பிக்குகள் சிவப்புத் துணியில் எழுதப்பட்ட முறைப்பாட்டை எடுத்துச் சென்று சமன் தெய்யோவிடம் சமர்ப்பித்தார்கள். ஜனாதிபதியை அவரது நம்பிக்கைகளிற்கூடாகவே எதிர்கொள்ளத் தொடங்கியாயிற்று. இனி அடுத்தது என்ன என்பதை சமன் தெய்யோதான் தீர்மானிக்க வேண்டும்....

மழை ஓய்ந்து விட்டது.

இரவு மிகவும் நிசப்தமாக இருந்தது. தூரத்தில் ஏதோ ஒரு வாகனம் விடாமல் ஹோர்ண் எழுப்பியபடி சென்றது. மழைநீர் கூரைவழியாக வடிந்து துளித்துளியாகச் சொட்டிக் கொண்டிருக்கும்சத்தம் மட்டும் இப்பொழுது கேட்டது. சிறிமாவோ அந்தச் சத்தத்தை உற்றுக் கேட்டார். ஒரே சீராக நீர்த்துளிகள் நிலத்தில் எதன் மீதோ விழும் சத்தம். அதில் ஒரு லயம் இருந்தது. இரவின் நிசப்தப் பின்னணியில அந்த லயம் மனதிற்கு இதமாக இருந்தது சில மாதங்களிற்கு முன்பு எதிர்க்கட்சிகள் மேற்கொண்ட கூச்சல் எதிர்ப்புப் போராட்டத்தின்போது [ஜனகோஷ] எழுந்த இரைச்சலை விடவும், கடந்த தசாப்தங்களாக இவர்கள் எல்லோரும் பாராளுமன்றத்தில் எழுப்பிய கூச்சல்களை விடவும் ஏன், சில தினங்களின் முன் சமன் தேவாலயத்தில் ஓதப்பட்ட பிரித் உச்சாடனங்களை விடவும் இந்த நீர்த்துளிகளின் ஓசை மெய்யானதாகவும், இயல்பானதாகவும் இருந்தது. இவர்கள் இதுவரை நாளும் எழுப்பிய எல்லா வித அரசியல் கூச்சல்களிலும் இராத ஒரு லயம் இதில் இருந்தது. சிறிமாவோ அதை மிகவும் உற்றுக் கேட்கலானார்... ஒரு உன்னதமான இசையைக் கேட்பதைப் போல... மனம் மெல்ல அமைதியடையலாயிற்று... நித்திரை வருவது போலிருந்தது....

திடீரென்று நீர்த்துளிகள் விழும் சத்தம் பெரிதாகக் கேட்கலாயிற்று. படிப்படியாக அதிகரித்துக் கொண்டு போய் ஒரு கட்டத்தில் ஒவ்வொரு சத்தமும் ஒவ்வொரு வெடியோசை போலக் கேட்டது. பின்னணியில் வேறொரு சத்தம், கிட்டத்தட்ட விகாரைகளில் ஒலிக்கப்படும் மணியோசையைப் போன்று கேட்டது. சிறிதுநேரத்தில் வெடியோசை அடங்கலாயிற்று. இப்பொழுது மணியோசை மட்டும் துல்லியமாகக் கேட்டது. சிறிமாவோ அந்த மணியோசையைக் குறிப்பாக வேறு எங்கேயோ முன்பு கேட்டிருப்பதை உணர்ந்தார். எங்கே யென்று நினைவில் கொண்டுவர முயன்றார் ஓ இது சமன் தேவாலயத்தின் மணியோசை அல்லவா...? வியப்பும், திகைப்பும் மேலிட, சிறிமாவோ போர்வையை உதறியபடி எழுந்தார். ''பயப்படாதே பெண்ணே... நான்தான் வந்திருக்கிறேன்......'' யாருடைய குரல் அது? சிறிமாவோ குழம்பியபடி திரும்பினார்...ஓ...சமன்தெய்யோ..

சமன் தெய்யோ அமைதியாகப் புன்னகைத்தபடி நின்றிருந்தார். உடனடிப் பார்வைக்கு அவர் நீலநிறமாகத் தோன்றினார். ஆனால் உற்றுப் பார்த்தபோது வெண்ணிறமாகத் தோன்றினார். றோஸ் மீற் பிளேசிற்கு சமன் தெய்யோ வந்திருக்கிறார்... சிறிமாவோ பதற்றமடைந்தார். தெய்யோவை உடனடியாக வணங்கினார். சமன் தெய்யோ அறையின் மூலையிலிருந்த ஒரு கதிரையை நகர்த்தி அதில் அமர்ந்தார். ''மூதிய பெண்ணே நீயும், உனது சக எதிர்க்கட்சிகளும் அனுப்பிய மகஜர் கிடைத்தது. அதுதான் உன்னோடு கதைக்கலாம் என்று வந்தேன்...'' சிறிமாவோ உசாரானார். சமன் தெய்யோவுடன் உரையாடுவதற்கு அவசரமாகத் தயாரானார்....

சமன்:- சண்டே ஒப்சேவரில் எழுதப்பட்டிருந்தது போல உங்கள் ஆதரவாளர்களின் மனிதச் சங்கிலி சில இடங்களில் மோசமாகக் காயமடைந்த ஒரு பாம்பு தன்னை இழுத்துச் செல்வதைப் போலத்தான் காணப்பட்டது. எனினும் உங்களுடைய மகஜர் என்னை வந்தடைந்தது.

சிறிமாவோ:- ஆகா நான் நிறையப் புண்ணியம் செய்திருக்கிறேன் என்பதால்தான் தெய்யோ மகஜர் கிடைத்த உடனேயே வீடுதேடி வந்திருக்கிறீர்கள்... சண்டே ஒப்சேவரின் பொய்களால் உங்களைத் தடுத்து நிறுத்த முடியவில்லை.

சமன்:- பெண்ணே... புண்ணியங்களைப் பற்றிக் கதைக்காதே. உன்போன்ற அரசியல்வாதிகள் புண்ணியங்களின் அளவைப் பற்றிக் கதைப்பது சங்கடமானது. சிக்கலானது...

சிறிமாவோ:- ஓம் .. ஓம்... பாவத்தைப் பற்றிக் கதைப்பதுதான் வசதியானது யார் குறையப் பாவம் செய்திருக்கிறோம் என்று கதைக்கலாம் தெய்யோ... 71 இல் நான் களனி ஆற்றில் கொன்று வீசிய இளைஞர்களைப்போல கிட்டத்தட்ட நான்கு மடங்கு தொகை இளைஞர்களை ஜனாதிபதி கொன்று விட்டார் தெய்யோ...

சமன்:- தெரியும்.. தெரியும்...

சிறிமாவோ:- அவரை எங்களால் வெல்ல முடியவில்லை அவர் பலம்பொருந்திய பில்லி சூனியக்காரர்களின் தலைவனாயிருக்கிறார். எங்களுடைய எல்லாப் போராட்டங்களையும் அவர்கள் முறியடித்து விட்டார்கள் என்றபடியால்தான் தெய்யோ... உங்களிடம் வந்தோம்.

சமன்:- ஆனாலும் பெண்ணே. அவரிடம் உள்ள மாந்திரீகர்களை விடவும் பொல்லாதது உங்களிடமுள்ள ஒற்றுமைக் குறைவுதான்- எதிர்க்கட்சிகளிடம் ஒற்றுமையில்லை ஏன். உனது கட்சிக்குள்ளேயே எத்தனை பிரிவுகள்? நீ வேறு, உன் மகன் வேறு, இடையில் ஹெல உறுமய' இப்பொழுது ஜன உறுமய...

சிறிமாவோ:- ஓம் தெய்யோ இது ஒரு சாபக்கேடு .. இவன் அனுரா இருக்கிறானே சொல்வழி கேட்கிறானில்லை எவ்வளவு செல்லமாக வளர்த்தேன்? சிறுவனாயிருக்கும்போது புத்திமதிகளைக் கேட்டான். ஆனால் இப்பொழுது முரடனாகி விட்டான்...

சமன்:- நண்டுகளைப் போல... கௌடில்யர் அர்த்த சாஸ்திரத்தில் கூறியிருகிறார்... இளவரசர்கள் நண்டுகளைப் போன்றவர்கள் தகப்பனைத் தின்னிகள் என்று...

சிறிமாவோ:- ஓ...... தெய்யோ... இப்பொழுதுதானே புரிகிறது என்னுடைய கனவுகளில் ஏன் நண்டுகள் வருகின்றன என்று .. தெய்யோ...... இவன் அநுரா ஒரு தாயைத் தின்னியாகி விடுவானா?

சமன்:- (அமைதியாகப் புன்னகைக்கிறார்) உங்களுடைய பௌத்த இளவரசர்கள் சிலர் தகப்பனைத்தின்னிகளாக இருந்திருக்கிறார்கள்... அஜாத சத்ரு, காசியப்பன்... இப்படியாக...

சிறிமாவோ:- அப்படியென்றால் அநுராவும் ..?

சமன்;- (அமைதியாகப் புன்னகைக்கிறார்.)

சிறிமாவோ:- ஐயோ...... தெய்யோ... நீங்கள்தான் காப்பாற்ற வேண்டும் ..எனது கட்சியை உடைந்து போக விடாதீர்கள். ஏதாவது வழி சொல்லுங்கள் ..

சமன்:- பெண்ணே... தமிழரின் ரத்தத்தில் கையை நனைக்காத சிங்கள அரசியல்வாதி யாராவதுஒருவரின் வீட்டிலிருந்து கடுகு கொண்டுவா .. பிறகு சொல்லுகிறேன்...

சிறிமாவோ:- (மௌனமாயிருக்கிறார்.)

சமன்:- நீதிகோரிய தமிழரிற்கு நீங்கள் யாருமே நீதி வழங்கவில்லை. இப்பொழுது உங்களிற்கு அநீதி இழைக்கப்படும்போது எனது சந்நிதானத்திற்கு வந்திருக்கிறீர்கள்.

சிறிமாவோ:- தெய்யோ முதலில் ஜனாதிபதியை வீழ்த்தி விடுங்கள். பிறகு நாங்கள் எல்லோருமாகச் சேர்ந்து தமிழரிற்கு நீதி வழங்குகிறோம்.

சமன்:- பெண்ணே உங்களிடம் நீதி கோருபவர்களிற்கு முதலில் உங்களுடைய நீதியை நிரூபித்துக்காட்டுங்கள். பிறகு உங்களிற்கு அநீதி இழைப்பவரிடம் நீதி கேட்டுப் போராடத் தேவையான முதுகெலும்பு தானாகவே உருவாகிவிடும்.

சிறிமாவோ:- தெய்யோ... எங்களுடைய மகஜரை நீங்கள் சாதகமாகப் பரிசீலிக்க மாட்டீர்கள்போற் தெரிகிறதே. நீங்கள் எங்களைக் கைவிடப் போகிறீர்கள்போற் தெரிகிறதே... எல்லாம் அந்தப் பதின்மூன்றின் வேலைதான். ஆரம்பத்திலேயே நான் சொன்னேன், 13 ஆம் திகதி, 13 எதிர்க்கட்சிகள் சேர்ந்து சமன் தெய்யோவிடம் போக வேண்டாம் என்று. யாராவது கேட்டார்களா?

சமன்;- பெண்ணே திகதிகளில் ஒன்றும் இல்லை அந்தத் திகதியைத் தெரிவுசெய்த உங்களுடைய அரசியலில்தான் பழுது இருக்கிறது. வழமையாக நீங்கள் முக்கிய பதவிகளை ஏற்கும்போதோ அல்லது நல்ல காரியங்களைத் துவங்கும்போதோ தலைமை பிக்குவிடம் முகூர்த்தம் கேட்டுத்தான் துவங்குவீர்கள். ஆனால் இந்த முறை என்னிடம் வரும்போது நீங்கள் முகூர்த்தம் பார்க்கவில்லை. பதிலாக றோகண விஜயவீர கொல்லப்பட்ட தினத்தை முகூர்த்தமாக்கி விட்டீர்கள் .

சிறிமாவோ:- (மௌனமாயிருக்கிறார்.)

சமன்:- என்னிடம் மகஜர் கொண்டு வந்ததை நீங்கள் இதயசுத்தியோடு செய்யவில்லை. அது ஒரு வழிபாடாக அமையவில்லை. அது ஒரு அருவருப்பான அரசியல் சடங்கைப் போலத்தான் நடந்தது. ஏற்கனவே புத்தரை உங்களுடைய அரசியலிற்குள் இழுத்து விட்டீர்கள். இப்பொழுது என்னையும் இழுக்கப் பார்க்கிறீர்கள்.

சிறிமாவோ:- தெய்யோ... நீங்களும் கறுப்புப் பூனைகளிற்கு அஞ்சுகிறீர்களா... ஜனாதிபதியை இம்முறையும் கவிழ்க்க முடியாது என்றா கூறுகிறீர்கள்?

சமன்:- (அமைதியாகப் புன்னகைக்கிறார்.)

சிறிமாவோ:- (விரக்தியடைந்தவராக) அப்படியென்றால் தெய்யோ ஒன்று செய்யுங்கள். நான் பரிநிர்வாணம் அடையும் வழியைச் சொல்லுங்கள். நான் அரசியலையே விட்டு விடுகிறேன். பிறகு அநுராவாச்சு. சந்திரிகாவாச்சு...

சமன்:- (இகழ்ச்சியோடு) இலங்கைத் தீவில் அரசியல் எதிர்காலம் இல்லாதவர்களும் தமது அரசியல் வாரிசுகளால் ஒதுக்கப்பட்டவர்களும் இப்பொழுது பரிநிர்வாணம் பற்றிக் கதைப்பதுபோல் தெரிகிறது. ஏற்கனவே ஒரு ஜே. ஆர். இப்பொழுது நீ... எல்லோருமாகச் சேர்ந்து தம்ம துவீபத்தை யுத்த துவீபமாக மாற்றி விட்டீர்கள். இப்பொழுது பரிநிர்வாணமா கேட்கிறீர்கள்?

சமன் தெய்யோ சினத்தோடுஎழுகிறார். சிறிமாவோ அவரை வணங்க முற்படுகிறார். ஆனால் கைகளை அசைக்க முடியவில்லை. விலகிச் செல்லும் சமன் தெய்யோவைக் கூவியழைக்க முயல்கிறார். ஆனால் குரல் எழவில்லை. மறுபடியும் மறுபடியும் முயல குரல் வரண்டு போய் கேவலாக ஒலிக்கிறது. சிறிமாவோ திடுக்குற்று விழித்து விடுகிறார். பயங்கரமாய் வியர்த்தது. ஓ... எல்லாமே கனவுதான். ஆனால் நல்ல வேளை நண்டுகள் வரவில்லை.

---

''அம்மா பசிக்குது...'' என்று பாடசாலை விட்டு வரும் சுதன் தாய் கண்மணியின் சீலைத்தலைப்பைப்பிடித்துச் சிறு சிணுக்கத்துடன்

சிறுகதை

ஓடிப்போய் என்ன வாங்கியந்தவர் என்பதை அறிவதற்காக சைக்கிள் கான்ரிலில் தொங்க விடப்பட்ட சிறு 'பாக்கை' திறந்து பார்த்தாள்.

''எங்கை கண்மணி சுதன்?''

மணியாகிறது. சிவதாசு இன்னும் வீட்டுக்கு வரவில்லை. சமைத்த சாப்பாட்டை கண்மணி இன்னும் சாப்பிடவில்லை சிவதாசை இன்னும் காணவில்லை என்று பொதிந்து

தாய்நாட்டை நேசிப்பவர்கள் என்னைப்பின் தொடருங்கள்

# வளர்ப்பு

**கருணை-ரவி**

துச் சிறு சிணுக்கத்துடன் கேட்டான். அவள் இதயம் கருகுவது போலிருந்தது. ஓடிப்போய் குசினிக்குள் நுழைந்து சீனிட்போத்தலை திருகினாள்; ஏமாற்றம் மன வதைக் குடைகின்றது

சுதனின் முகத்தைத் திரும்பிப் பார்த்தாள். பசி ரேகைகளின் வறட்சி பளிச்சிட்டது. அவன் காலையில் பாடசாலை செல்லும் போது ஒரு பணிசுடன் தான் சென்றான். அவனின் நிலையை உணர்ந்தவள் அந்தப் பிஞ்சுள்ளம் பட்டினித்தீகளால் வேகக் கூடாதென்பதற்காக, அந்தச் சீனிப் போத்தலுக்குள் சொட்டுச் சாயத்துடன் சுடுதண்ணி கலந்து, கலக்கிக் கொடுத்தாள் அவன் அதை வாங்கவில்லை. தனது வலது கரத்தினால் அந்தத் தேநீர்க் குவளையைத் தட்டிவிட்டு -

''எனக்குது வேண்டாம், சோறு தான் வேணும்.''

என்று அடம் பிடித்தான். அவளால் அவனுக்கு என்ன பதில் கூறுவதென்றே தெரியவில்லை. அப்படிக் கூறினாலும் அவன் அதைப் புரிந்து கொள்ளுமளவிற்குப் பக்குவமடையவில்லை. பாலர் வகுப்புத்தானே! இப்பசோறில்லை என்று கூறினால் அவன் அதைக் கேடகவா போகிறான். மீண்டும் தேநீரை நீட்டி

''குடியடா என்ரை கண்ணு இப்ப அப்பா அரிசி வாங்கி வருவார். நான் கெதியிலை பிள்ளைக்குச் சோறு சமைசுத் தரலாம்''

'நீங்கள் சும்மா செல்லிறியள். நேத்தும் உப்பிடித்தான் சொல்லிப்போட்டு ராத்திரி சோறு தந்தனீங்கள்.''

என்று சிணுங்கினான். அவளால் அவனுக்கு ஒரு பதிலும் கூறமுடியவில்லை. அவளின் கண்கள் பனித்தது.

மனிதனாகப் பிறந்தால் ஏழையாக இருந்து துன்பப்படுவதிலும் பார்க்க அவன் செத்து மடிந்திடவேணும் அல்லது குடும்பம் என்ற வட்டத்திற்குள் வராமல் கஷ்டப்பட்டாலும் தான் எதற்குப் பிறந்தேன் என்றஎண்ணமும் அவன் அடிமனதில்எழாது இதுதான் வாழ்க்கை என்று சிலவேளைகளில் சந்தோஷப்பட்டுக் கொண்டிருப்பான். ஆனால் குழந்தை குட்டிகளோடு வாழ்ந்து கொண்டிருக்கும் போது ஏழ்மைப் புயலில் சிக்கித் தவித்து அந்தக் குழந்தைகளை வளர்க்கமுடியாத நிலை ஏற்பட்டால், அந்தப் பெற்ற உள்ளங்களின் வேதனைகள் சொல்லில் அடங்குமா......?

அவளும், கணவன் சிவதாசும் சுதனை வளர்க்க எவ்வளவு கஷ்டப்படுகின்றார்கள் சிவதாஸ் விறகு வெட்டி விற்றுத்தான் அந்தக் குடும்பத்தைக் காத்து வருகின்றான். சில வேளைகளில் ஹெலிகள்... பொம்மர்கள்... சகடைகள் .. எல்லாம் இணைந்து குண்டு மழை பொழிந்தால்,பாதுகாப்பான இடங்கள் தேடிப்போக வேணும். அந்த நேரங்களில் அவன் விறகுக்குச் செல்ல முடியாது. பட்டினிப் பற்கள் வயிற்றைக் கடிக்க கண்ணை மூடிக்கொண்டு படுப்பார்கள். விடிந்ததும் சிவதாஸ் ஒட்டல் வயிற்றுடன் சைக்கிளை ஓட்ட முடியாது வீசுங்காற்றை எதிர்த்துப் பெரல்கட்டைகளை உழக்குவான்.

மனைவி கண்மணி ஐஞ்சாறு கடைகள் அலைந்து, கடன் கேட்டு சுதனின் வயிற்றை நிரப்பிப் பாடசாலைக்கு அனுப்புவான். சில வேளைகளில் சாப்பாடேதுமில்லா விட்டால், வெறும் தேநீருடனும் அனுப்புவாள். ஏனென்றால், அவன் கல்வியை இழக்கக் கூடாதென்பதற்காக!

சிவதாசு அவளுக்கு அடிக்கடி கூறுவான் சுதனை ஒரு நாளாவது பாடசாலைக்கு அனுப்பாமல் விடக்கூடாதென்று, ஏனென்றால். தான் படும் கஷ்டம் நாளை சுதனும் படக்கூடாது, சுதனை நன்றாகப் படிப்பித்து ஒரு உயர் நிலைக்குக் கொண்டு வர வேணும். அதற்காகச் சுதனை நன்றாக வளர்க்க வேணும். ஒரு பிள்ளையை உயர் நிலைக்கும் தாழ்நிலைக்கும் கொண்டு வருவது பெற்றோர்களின் வளர்ப்பிலைதான் தங்கியிருக்கிறதென்று! அவனின் அந்தக் கருத்தை அவளின் அடிமனம் உள்வாங்கிக் கொண்டது.

படலை திறபடும் சத்தம் கேட்கின்றது ... கண்மணி ஒத்தாப்புத்தட்டியை மிதத்திப் பார்த்தாள் கணவன் சிவதாசு சைக்கிளுடன் வந்தான்.

''எங்கை கண்மணி சுதன்?''

''பசிக்குதெண்டு நல்லா அழுதுபோட்டு இப்பத்தான் நித்திரை கொண்டவன்.''

என்ற அவளின் வார்த்தையைக் கேட்டதும் சுவாசப்பை வெடிப்பதுபோலிருந்தது. சிவதாசுவுக்கு. அவளின் கையிலிருந்த ''கேக்'' பாசலை வாங்கி சுதனை எழுப்பினான்...

சிவதாசுவுக்குப் பசியினால் குடல்கள் உள்ளிழுத்து மூச்சு விடவே கஷ்டமாக இருந்தது. அவனின் இளைப்புக்கள், சோர்வுகள் என்பதை அவதானித்த கண்மணி கெதியில் சோறு சமைக்கவேணும் என்பதற்காகக் கணவனிடம் விறகு வித்த காசைக் கேட்டாள். அவன் பொக்கற்றுக்குள்ளிருந்த எண்பது ரூபாவை எடுத்துக் கொடுத்தான்.

அந்த எண்பது ரூபா அவன் இதுவரையும் வாங்கிய கடன்கள் அடைக்கக் காணாது. முன்பு என்றால் அந்தப் பணமே போதும் இரண்டு நாள் சீவியத்திற்கு. ஆனால், இப்போ ஒரு கிலோ சீனி வாங்கப் போதுமா...?

இந்தப் புனிதப் போராட்டத்தை அரசு நசுக்கி, தமிழினத்தைப் பாடைகட்டி அனுப்பும் நோக்கோடு, பொருளாதாரத் தடைச்சட்டம் என்ற அம்புகளைப் பாய்ச்சித் தமிழனை நாளுக்குநாள் அழித்துக் கொண்டு வருகின்றது! அவனின் அந்தத் திட்டத்தில் முதலில் பலியாகிக் கொண்டிருப்பது அன்றாடம் கூலி வேலை செய்து பிழைத்துக் கொண்டிருப்பவர்கள் தானே!

ஒரு மாதிரி அன்றைய பொழுதுபோய் மறுநாள் மலர்கின்றது. சிவதாசுவழமை போல் சைக்கிளை எடுத்துக் கொண்டு விறகு வெட்டச் செல்கின்றான். கண்மணி சுதனுக்குச் சாப்பாடு கொடுத்து விட்டு பாடசாலைக்கு அனுப்புகின்றாள்.

நேரங்கள் நகர்ந்தது...சுதன் பாடசாலை விட்டுவந்து அரைவில்லை என்று பொதிந்து வைத்த ஏக்கங்களை கட்டவிழ்த்து விடுகின்றாள். எண்ண அலைகள் ஒவ்வொன்றும் மூச்சோடு அள்ளுப்பட்டுச் செல்லச் செல்ல தேகம் வியர்த்துக் கொட்டுகிறது..

படலையில் வந்து அங்கும் இங்குமாய் பார்வை வலைகளை வீசுகின்றாள். தூரத்தில் ஒரு சைக்கிள் வருகின்றது. அது யார் என்பதை அவளால் இனங்காண முடியவில்லை. ஆனால் அந்தச் சைக்கிளின் பின் கரியலில் கட்டிவிடப்பட்ட நீண்ட தடிகள் மட்டும் யாரோ விறகுக்கார ஆள்தான் என்பதை அவளுக்கு உணர்த்தியது. மனதில் சற்று நிம்மதி!

அந்தச் சைக்கிள் மிகவும் அருகில் வந்ததும் அவளின் மனதில் எழுந்த நிம்மதி நிலைத்து நிறகவில்லை. சலனம் பெருக்கெடுத்தது. சைக்கிளில் வந்தவர் அவளுக்கருகில் சைக்கிளை நிறுத்தி

இதுதானே சிவதாசு வீடு?

என்று கேட்டார். அவளின் குழம்பிய மனதில் ஒரு இடி விழுந்த மாதிரி இருந்தது. ஏன்? எதற்குக் கேட்கின்றார் என்பதொன்றும்அவளுக்குவிளங்கவில்லை நெஞ்சு அதிகமாகப் 'படக்' 'படக்' என்று அடிக்க

''ஏ... ஏ... ஏன் கேட்கிறியள்? நான்தான் அ... அ... அவற்றை...''

வார்த்தைகளை அரைகுறைகளாக நிறுத்திக் கொள்ள அந்த மனிதர் கண்மணியின் முகத்தைப் பார்த்தார். ஏக்கத் தவிப்புக்களின் கொந்தளிப்புக்களால் அவளின்முகம் வறண்டு சோகங்களினால் சுழிவிழுந்திருப்பதைக் கவனித்தும் தான் கூறவந்த விசயத்தை எப்படிக் கூறி முடிப்பதென்பதற்கு ஒரு வழியுமில்லாமல் தத்தளித்தார் அவளோ கணவன் பசிக்களையினால்தான் எங்கையேனும்

(2-ம் பக்கம் பார்க்க)

-க.பூவேந்தன்

அந்திப் பொழுதில் ...
கதிரவன் ஒய்வெடுக்கும் நேரமதில்
சோதனை நிறைந்ததும்
வேதனையானதுமான
இலட்சியப்பயணத்தைத் தொடர்கிறேன்!
தாய் நாட்டின் விடுதலையை நேசிக்கிறீர்
களா?


இருந்தால் --
என்னைப் பின் தொடருங்கள்!
ஆம்; பாதை நெடியதுதான் : பயணம்
கொடியது தான்-
ஆனாலும்-நான் சோகத்தால் சோரவில்லை
சுகத்தைத் தேடி நான் திரியவில்லை.
அதோ!
செவ்வானச் சிவப்பு ஒளியில் மின்னுவது
தான்

என் தோழர்களின்
இரத்தக் கறைபடிந்த பாதச் சுவடுகள்!
ஆம்;
வீரவரலாற்றை எழுதச் சென்ற
வேங்கைகளின் தடயங்களே அவை!
உங்கள் பாதங்களை
அங்கே பக்குவமாகப் பதியுங்கள்
வீர-தீர தியாக முத்துக்கள் பதிக்கப்பட்டுள்
ளன

சொந்தத்தை இழந்தேன் ...
பாச உறவைப் பிரிந்தேன் இனத்தின்
விடுதலையைத்தேடுகிறேன்!
தாய்நாட்டை நேசிப்பவர்களே!
என்னைப் பின் தொடருங்கள்
இந்த நெடிய பயணத்தின்
போது-
என்னை சாவு காவு கொள்ளலாம்
அது எனக்கு மகிழ்ச்சி!
ஏனெனில்-
பின்வரும் சந்ததியினரின் வாழ்வு
ஒளிமயமாகும் என்பதனால்!

என்சாவின் பின்
என் குருதிதோய்ந்த
துப்பாக்கியை
என் நண்பர்கள் ஏந்துவார்கள்
என்ற நம்பிக்கையுடன்
என்-இலட்சியப் பயணத்தைத்
தொடர்கிறேன்!
மறுபடியும் கேட்கிறேன்!
தாய்நாட்டை நேசிப்பவர்கள்
என்னைப் பின் தொடருங்கள்!

# தேசியவாதமும் நவீன சிந்தனை ஓட்டமும்




ஒரு சமூகம் எவ்வளவுக்கு எவ்வளவு நவீன கருத்தோட்டம் உடையதாய் இருக்கின்றதோ அவ்வளவுக்கு அவ்வளவு அது தன்னை முன்னேற்றத் தயாரானதாகி விடுகின்றது. இதனால் ஒரு சமூகம் தன்னை சிந்தனா ரீதியாக அயராது புதுப்பித்துக் கொள்ள வேண்டியதாகிறது. புதுப்பிப்பதென்பது பழையதை மறந்து விடுவதென்பதன்றி, அதற்குட் புதையுண்டு விடாது அதனை அனுபவமாகக் கொண்டு புதுமையை சிந்திப்பதென்பதுதான். சில வேளைகளில் சமூகம் அயராது புதுப்பிக்கப்படுவதென்பதற்குப்பதிலாகப் பழமை தேக்க மடைந்து விடுவதுமுண்டு. பல வேளைகளிற் பொருள்மய வாழ்வில் புதிய மாற்றங்களேற்பட்டாலும் கூட கலாசாரம் மற்றும், சிந்தனை சார்ந்த துறைகளிற் பழமை இறுகிப் போவதுமுண்டு. இது சமூகத்தின் இயல்பான வளர்ச்சியை பல வழிகளில் தடுத்து விடுகின்றது.

இத்தகைய சமூகத் தேக்கங்களையும் சமூகத் தடைகளையும் தகர்த்து புதிய எண்ணோட்டங்களை உருவாக்குவதற்கு சிந்தனைத்துறை ஒரு தீர்க்கமான பாத்திரத்தை வகிப்பதுண்டு. ஏறக்குறைய நாலரை நூற்றாண்டுகளாக காலனித்துவ அடிமை முறையிலிருந்து இலங்கை காலனித்துவ எதிர்ப்புப் போராட்டத்தின் மூலம் தன்னைப்புடமிடாது வெள்ளையர்கள் தூக்கிக்கொடுத்த அடிமைக்கனியைச் சுதந்திரம் எனப்பெயரிட்டு புசிக்கலாயினர். இதனால் காலனித்துவ சிந்தனை முறையும வாழ்க்கையோட்டமும் இலங்கையர் மத்தியில் இறுகிப்போயுள்ளது.

ஒக்ஸ்பேர்ட் பல்கலைக்கழகத்தின் கல்வி பயின்றS. W· பண்டாரநாயக்கா இலங்கைக்கு ஒரு நவீன வாழ்வளிக்கப் போவதாகக் காட்சியளித்தார். "இறந்து கொண்டிருக்கும் பழைய உலகத்திற்கும் பிறந்து கொண்டிருக்கும்புதிய உலகத்திற்கும் இடையில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம்" என்ற ஒரு மேற்கோளை முன்வைத்து புதிய யுக புருஷனாய் நவீன இலங்கையைச் செதுக்கப்போகும் ஒரு சிற்பியாய்த் தன்னைப் பிரகடனப்படுத்தினார். ஆனால் அவர் இறந்தகால துட்ட கைமுனு ஜதீகத்திற்கு நிகழ்காலத்தில் புதுப்பிறப்பளித்தார். நவீன தேசியவாதத்தினைப் பழமைக் கண் கொண்டு நோக்கினார் இதனால் தமிழ்த்தேசிய இனத்தை உரிமையற்றவர்களாகக் கருதினார். இத்தகைய போக்கு மிகப்பெரும்பான்மையான சிங்கள புத்திஜீவிகளிடம் காணப்பட்டது. இவர்களின் இத்தகைய பழமைக் கருத்தோட்டமானது இனங்களிடையிலான அன்னியோன்னியத்தைக் தகர்த்தெறிய வழிவகுத்தது.

சமூக வாழ்வில் சகல மட்டங்களிலும் நவீன கண்ணோட்டமும் அதற்கான சிந்தனைப் போக்கும் அவசியமானது. இலங்கையில் இன்று இருவகைத் தலைமுறையைக் கொண்ட அறிவியலாளர்கள் உள்ளனர். ஒன்று ஆங்கிலக் கல்வி மூலம் வந்த தலைமுறையினர். மற்றையது தாய்மொழிக்கல்வி மூலம் வந்த தலைமுறையினர் இவ்விரு தலைமுறையினருக்கிடையிலும் தலைமுறைப் பிளவு இருக்கின்ற போதிலும் சிந்தனை முறையில் பழமைவாதக் கருத்தோட்டம் மிக்கவர்களாகவே பொதுவாக இவர்கள் காணப்படுகின்றார்கள். (விதிவிலக்கான ஒரு சிலரைத் தவிர) பொதுவாகக் காலனித்துவ சிந்தனை மரபில் இவர்கள் இறுகியுள்ளார்கள் பலவேளைகளில் பலநாடுகளில் உள்ள பழமைச் சிந்தனை கொண்ட பல அறிவியலாளர்கள் தேசியவாதத்தைப் பழமைக் கண் கொண்டு பார்ப்பதுண்டுசிலவேளைகளில் ஒரு இனம் தோன்றும்போதே அது தேசிய இனமாகவே தோன்றிவிடுகின்றதென்ற கருத்தோட்டத்தைக்கொண்ட அறிவியலாளர்களும் உளர்.

இப் பின்னணியில், கடந்த திங்கட்கிழமை யாழ், இந்துக் கல்லூரி குமாரசுவாமி மண்டபத்தில் ஆசைப்பிள்ளை நினைவுப் பேருரை நிகழ்த்திய பேராசிரியர் எம், பாலகிருஷ்ணன் தேசியவாதம் பற்றிக் கூறிய கருத்துக்கள் சிறப்பாகக் கவனிக்கப்படத் தக்கது. தேசிய வாதம் பற்றிய இவரது கருத்துக்கள் நவீன கண்ணோட்டம் மிக்கவையாயிருந்தன. ஒரு இனமானது வளர்ச்சிக் கட்டங்களுக் கூடாகவே தேசிய இனமாகப் பரிணமிக்கிறது என்ற கருத்தோட்டத்தைக் கொண்டிருந்த இவர் ஒரு இனம் தேசிய இன வளர்ச்சியை எட்டும் கட்டத்தில் அது தன்னைத் தேசிய இனம் என்பதற்குரிய அரசியல் மயப்பாட்டை அடையும் விடயத்திற்கு முக்கிய அழுத்தம் கொடுத்தும் பேசினார், பொதுவாக தேசியவாதத்தின் இன்றைய அனுபவங்களை உள்வாங்கிய ஒரு நவீன கண்ணோட்டம் இதில் காணப் பட்டது

ஆங்கிலக் கல்விக்கூடாக வந்த ஒரு பழைய தலைமுறையைச் சார்ந்த பாலகிருஷ்ணன் புதிய கருத்தோட்டத்தைக் கொண்டவராய்க் காணப்படுமிடத்து அதில் இரட்டிப்பான முன்னேற்ற அறிகுறிகள் இருக்கமுடியும். ஒன்று பழைய அனுபவமும் புதிய தேடலும் இணையும் போது அது அறிவியலில் ஒரு புதிய பாய்ச்சலை உருவாக்க முடியும்.

தொடர்ந்து பேசிய அவர் ஈழத்தமிழ்த் தேசியவாதம் பற்றிக் குறிப்பிடுகையில் 19ம் நூற்றாண்டின் பிற்பகுதியில் தமிழ்த்தேசியவாதம் அரசியல் மயப்படத்தொடங்கியதென்று கூறியதுடன் ஆறுமுகநாவலரைப்பற்றி சமயரீதியாகவும் மொழிரீதியாகவும் ஆய்வுகள் வெளிவந்துள்ள போதிலும் சமூகவியல் ரீதியாக நாவலர் ஆய்வு செய்யப்படவில்லையென்றும் ஆனால் அதே வேளை சிங்கள பௌத்தத் தேசியவாதத்திற்காக உழைத்த அநகாரிகதர்மபாலா பற்றி சமயம் மற்றும் சமூகவியல் சார்ந்த பல்வேறு அம்சங்களில் அவர் ஆய்வு செய்யப்பட்டுள்ளார் என்பதையும் சுட்டிக் காட்டினார்.

சமூகவியற் கண்ணோட்டத்துடன் தமிழ்த்தேசிய வாதம் பற்றிய ஒரு முழுநீள வரலாறு எழுதப்பட வேண்டியது அவசியமானதெனத் தெரிகிறது. சிங்களச் சமூகம் பற்றி கணநாத்ஒபேசேகராமேற்கொண்ட மானிடவியல் — சமூகவியல் ரீதியான ஆய்வுகள் சிங்கள பௌத்த தேசியவாதம் சம்பந்தமான பல புதிய விளக்கங்களை உருவாக்க உதவியுள்ளது தமிழ்ச் சமூகம்பற்றி மானிடவியல், சமூகவியல், பொருளியல், பண்பாட்டியல் மற்றும் அரசியல் வரலாற்றுகலை இலக்கிய ரீதியான ஆய்வுகள் அனைத்தும் ஒன்று திரட்டப்படும் போதுதான் தமிழ்த் தேசியம் பற்றிய ஒரு தெளிவான விளக்கத்தைப் பெற முடியும். தேசியவாதம் என்பது குறிப்பாக அரசியல் வரலாற்றுத் துறையினருக்குச் சிறப்பாக உரிய ஆய்வாயினும் இதில் பல்துறையினரும் ஈடுபடமுடியும். குறைந்த பட்சம் பல்துறையினரும் தத்தம் துறைசார்ந்த ரீதியில் தமிழ்த் தேசியவாதம் பற்றிய ஆய்வுகளில் ஈடுபட்டால் அவைஒரு மொத்தமான ஈழத்தமிழ்த் தேசியம் பற்றிய கருத்தை உருவாக்க ஏதுவாக அமையலாம்.

எனவே எல்லாத்துறை சார்ந்தவர்களிடமும் தேசிய வாதம் பற்றிய ஒரு நவீன எண்ணப்பாடு குடிகொள்ள வேண்டும். ஐரோப்பிய சமூகமானது இன்று தேசிய வாதத்தின் பல எல்லைகளைத்தாண்டிப் பிராந்திய வாதத்திற்கும் மற்றும் புதிய சிந்தனை வீச்சுக்கும் தன்னை உட்படுத்தியுள்ளது. தேசிய அரசு பற்றிய ஐரோப்பியரின் சிந்தனை ஓட்டத்தின் பல புதிய அம்சங்கள் தோன்றியுள்ளன. வெகுசனத் தொடர்புச் சாதனங்களினதும், மற்றும் பொருளாதாரப் போக்குகளினதும் தாக்கத்துக்கும் உள்ளாகி ஐரோப்பிய சமூகம் தேசிய வாதத்தில் பல புதிய பரிமாணங்களை எட்டியுள்ளது. அவர்கள் புதிய உலக ஒழுங்குக்கும் புதிய வளர்ச்சிக்கட்டத்திற்கும் ஏற்ப புதிய சிந்தனை ஓட்டத்தைப் பெறுகின்றனர். ஆனால் ஆசியாவின் பல பாகங்களிலும் தேசியத்தின் கட்டுமானங்கள் கூட இன்னும் நிறைவேற்றப்படாது காணப் படுகிறது.

இத்தகைய பின்னணியிற்தான் நவீன கருத்தோட்டம் மிக்கவர்களின் பங்களிப்புப் பெரும் முக்கியத்துவத்தைப் பெறுகிறது. ஒரு கருத்தானது யார் யார் வாயிலிருந்து வருகின்ற தென்ற பேதங்களுக்கப்பால் அக் கருத்து சரியா பிழையா என்ற வாதங்களே பிரதான இடத்தைப் பெற வேண்டும் இதற்கான கருத்தியற் பண்பாட்டை வளர்த்தெடுப்பது குறுங்காலத்தில் சாத்தியப்படக்கூடியதல்ல. ஆயினும் அத்திசை நோக்கிய நகர்வுக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கவேண்டும்.

ஆசியாவிற் காணப்படுகின்ற தேசிய இனங்களின் வளர்ச்சிப் போக்கில் தமிழ் ஈழத் தேசியத்துக்கு சில சிறப்பான அம்சம் உண்டு. குறிப்பாக எழுபதுகளின் பிற்பகுதியில் தமிழர் தேசியமானது ஒரு புதிய கட்டப் பரிமாணத்தை அடைந்தது. இப்பரிமாணமானது தெளிவான ஆய்வுக்கு உட்படுத்தப்பட வேண்டும் தேசியப் பிராந்திய சர்வதேசிய அம்சங்களின் தலையீடுகளுக்கு மத்தியில், தமிழ்ச் சமூகத்தில் நிலைபெற்றிருந்த மிதவாதத் தலைமைக்கு மத்தியில் தமிழர் தேசியம் ஆனது தன்னை நிலைநிறுத்த வேண்டியிருந்தது. இத்தகைய பின்னணியில் தமிழர் தேசியத்தின் புதிய கட்டப்பரிமாணம் அரசியல், பொருளாதார, புவியியல் மற்றும் சமூகவியற் கண்ணோட்டங்களுடன் புது விளக்கத்தைப் பெறவேண்டும்.

## மு. திருநாவுக்கரசு

### சிரமம்

"புலிப்படை இயக்கம் நன்கு திட்டமிடப்பட்ட ஒரு சிறு குழுவினரால்தான் நடத்தப்படுகிறது. சிறு கூட்டத்தினர் என்பதால் அவர்களைக் கண்டுபிடிக்க பொலிசாருக்கு சிரமமாக இருக்கிறது. பெரிய இயக்கமானால் அதை மடக்குவது சுலபம்" இவ்வாறு உயர்தரப் பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

"ஐம்பது அல்லது அறுபதுக்கும் குறைவான தொகையினரைக் கொண்டதே இந்தப் புலிப்படை இயக்கம். இயக்கத்தின் அங்கத்தவர்கள் படித்தவர்களாக இருப்பதால் சாதுரியமாகவும் தந்திரமாகவும் நன்கு திட்டமிட்டு இயங்கி வருகின்றனர்."

"மிகச் சிறிய எண்ணிக்கையுடையவர்கள் என்பதால் அவர்களைக் கண்டுபிடிப்பதும், கைது செய்வதும் சிரமமாக இருந்து வருகிறது"- இவ்வாறு அவர் மேலும் விளக்கினார்.

—1978 மே 10 தினபதி

# கொழும்பின் 'இருதயத்தில்' வெடித்த குண்டு

1992 - நவம்பர், 16ஆம் திகதி காலை 8.35 மணி

கொழும்பை மீண்டும் அதிரவைத்த

கிளான்சி பெர்னான்டோவின் திறமைக்கும், அனுபவத்திற்கும் மாற்றீடான ஒரு கடற் படை அதிகாரி மட்டுமல்ல, அவர் பதவி நிலையில் உள்ள ஓர் அதிகாரி கூட சிறிலங்கா

கூடிய படகுகளைக் கொள்வனவு செய்வதன் மூலம், விடுதலைப் புலிகளின் கரையோரப் பகுதிகளுக்கானபோக்குவரத்தைக்கட்டுப்படுத்தும் முயற்சியில் தீவிரகவனம்செலுத்தினார். இதன்

பிரச்சினையல்ல. முப்படைகளின் தளபதிகள் - கூட்டுப்படை நடவடிக்கை தலைமையகம் - பாதுகாப்பு அமைச்சின் செயலாளர்கள் என உருவான முத்தரப்புப் பிரச்சினையாகும்

சுவடுகள்

சாடியுள்ளார். இதேபோல வவுனியா இராணுவத்தின் சோதனை முகாம் - கொழும்பில் தமிழர் வாழ்க்கை - பூசா முகாம் சித்திரவதை என விவரணங்கள் மிகமிகத் தெளிவாகவும் உண்மையாகவும் காட்டப்பட்டுள்ளன. சிலசமயம் ஒரு திரைப்படம்போல (திரைக்கு ஏற்றது) நிகழ்ச்சிகள் தீட்

கொழும்பை மீண்டும் அதிரவைத்த குண்டுவெடிப்பு ஒன்று காலிமுகத்திடலிலுள்ள மத்திய வீதியில் இடம்பெற்றது. ''கொழும்பில் குண்டுத் தாக்குதல்கள் இடம்பெறுவதைத் தடுப்பதற்கான சகல பாதுகாப்பு ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன என சிறிலங்காவின் பாதுகாப்பிற்குப் பொறுப்பான கூட்டுப்படைத் தலைமையகம் அறிவித்துநான்கு தினங்களுக்குள் இக்குண்டு வெடிப்புச் சம்பவம் இடம் பெற்றது. அதுவும் கேந்திர முக்கியத்துவமும் பாதுகாப்புமிக்கதுமெனக் கருதப்படும் கொழும்பின் 'இருதய நிலப்பகுதியில்' நிகழ்ந்தது.

தற்கொலைப் படைவீரன்ஒருவனின் இக்குண்டுத் தாக்குதலில் சிறிலங்காவின் முப்படைத் தளபதிகளில் ஒருவரான கடற்படைத் தளபதி வைஸ். அட்மிரல் கிளான்சி பெர்னான்டோவும். மேலும் மூன்று கடற்படை அதிகாரிகளும் கொல்லப்பட்டமை இராணுவ அரசியல் வட்டாரங்களில் பீதியுடன் பரவியது. [கிளான்சி பெர்னான்டோ பின்னர் அட்மிரலாக பதவி உயர்த்தப்பட்டார்.] கடந்த பதினைந்து வருட காலமாக இலங்கையில் நடைபெற்று வரும் ஆயுதப் போராட்டத்தில் சிறிலங்காவின் முப்படைகளின் தளபதி ஒருவர் அதாவது முதல் நிலை அதிகாரி ஒருவர் கொல்லப்பட்டமை இதுவே முதல் சம்பவமாகும்.

கொழும்பில் மேற்கொள்ளப்பட்ட இத்தாக்குதல் நன்கு திட்டமிடப்பட்டு, அபாரத் திறமையுடனும், மிகவும் துணிவுடனும் மேற்கொள்ளப்பட்டதுடன் கொழும்பில் பாதுகாப்பையும் கேள்விகுள்ளாக்கியது. ''இக்குண்டு வெடிப்பு நாட்டின் பாதுகாப்பிற்கும், குறிப்பாக தலைநகரின் பாதுகாப்பிற்கும் ஒரு சவாலாக அமைந்துள்ளது'' என 'ஐலண்ட்' குறிப்பிட்டது. இதேவேளை ''தலைநகரில் கூட அதிகாரிகளின் நடமாட்டத்தைக் கட்டுப்படுத்த வேண்டிய நிலையை உருவாக்கி உள்ளது'' என இராணுவ அதிகாரி ஒருவர் விசனம் தெரிவித்துள்ளார்.

கடற்படைத் தளபதி கிளான்சி பெர்னான்டோ கொல்லப்பட்டமையானது கடற்படை தலைமைப்பீடத்தில் பாரிய ஒரு இடைவெளியை ஏற்படுத்தியுள்ளது. சிறிலங்காவின் கடற்படையின்பதவி நிலை பட்டியலில் காணப்படும் ஒன்பது பதவிகளில் எட்டாவது தரத்திலிருந்த வைஸ் அட்மிரல் கிளான்சி பெர்னான்டோ கடற்படையின் உயர் அதிகாரியாகவும் இருந்தார் அடுத்த உயர் நிலை பதவியான 'அட்மிரல்' நிலை அவர் இறந்ததின் பின்னர் அவருக்கு வழங்கப்பட்டுள்ளது. ஆனால், அவரின் வெற்றிடத்திற்கு தற்பொழுது ஆறாவது பதவி நிலையில் அதாவது 'கொமடோர்' தரத்தில் உள்ள ஒருவரே நியமிக்கப்பட்டுள்ளார். இந்நிலையானது யில் உள்ள ஓர் அதிகாரி கூட சிறிலங்கா கடற்படையில் இல்லை என்பதைகாட்டுவதாக உள்ளது.

அதேவேளை வடபகுதியின் கடற்படைத் தளபதியாக கடமையாற்றிய கொமடோர் ஜெயமகா பின்னர் றியர் அட்மிரலாக பதவி உயர்வு பெற்றவர்(இவர்அராலியில் கடந்த ஆகஸ்ட்மாதம்நடந்த கண்ணி வெடிச் சம்பவத்தில் கொல்லப்பட்டமை குறிப்பிடத்தக்கது)இவரின் மரணத்தினால் கடற்படை உயர் நிலை அதிகாரிகள் மட்டத்தில் குறிப்பிடத்தக்க வெற்றிடம் முன்னரே ஏற்பட்டிருந்தது.

அட்மிரல் கிளான்சி பெர்னான்டோ 1991 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் சிறிலங்காவின் கடற்படைத் தளபதியாக பதவி ஏற்றார். ஆனால்,அதேகாலப்பகுதியில்முப்படைத் தளபதிகளிடம் இருந்த அதிகாரங்கள்கூட்டுப்படைத் தலைமையகத்திடம் மீண்டும் ஒப்படைக்கப்பட்டிருந்தது. ஆனால் பதவி ஏற்ற கடற்படைத்தளபதி இரண்டு விடயங்களில் தீவிர அக்கறை காட்டினார்,

ஒன்று விடுதலைப் புலிகளுக்கு கடல் வழியாக வரும் ஆயுத விநியோகத்தை தடை செய்வது. இரண்டு வடக்குக் கிழக்குக் கரையோரப் பகுதிகளில் நடைபெறும் விடுதலைப் புலிகளின் போக்குவரத்துக்களை கட்டுப்படுத்துவது. இவ் இரண்டு நடவடிக்கையின்மூலமும், புலிகளின் பலத்தை வெகுவாகக்குறைக்கலாம் என்பது அவரது திட்டமாக இருந்தது.

இதன் பொருட்டு. கடற்படைத் தளபதி கிளான்சிபெர்னான்டோ, இரண்டுவகைஅணுகுமுறையையும் கைக்கொண்டார். விடுதலைப் புலிகளின் ஆயுத விநியோக வழியைக் கட்டுப்படுத்துவதற்கு இந்தியக்கடற்படையின் உதவியை பெற்றுக் கொள்வது ஆகும் இதன் பிரகாரம் தமிழக முதலமைச்சர் செல்வி ஜெயலலிதாவுடன் மிக நெருக்கமான உறவை வளர்த்துக் கொள்வதிலும், இந்திய கடற்படை அதிகாரிகளுடனும் நட்புறவைப் பேணுவதிலும் அக்கறை காட்டினார். இதன் நிமிததம் இந்தியாவிற்கு இவ்வருட ஆரம்பத்தில் விஜயம் ஒன்றையும் மேற்கொண்டிருந்தார் இவ்விஜயத்தின் போது தமிழக முதலமைச்சர் செல்வி ஜெயலலிதாவையும்,இந்தியக் கடற்படை கிழக்குப்பிராந்தியத்தளபதிவைஸ். அட்மிரல் ராம்தாசையும் சந்தித்தார். ''விடுதலைப் புலிகள் எங்கள் எதிரிகள் உங்கள் கடற்படையின் நெருங்கியஒத்துழைப்போடு, பாக்கு நீரிணையை விடுதலைப் புலிகளின் நடமாட்டமில்லாத கடற்பரப்பு ஆக்குவோம்'' என்பது இந்தியாவிடம் அவர் விடுத்த கோரிக்கையாக இருந்தது.

இரண்டாவதாக,சிறிலங்காகடற்படையை நவீனப்படுத்துவதில் கிளான்சி பெர்னான்டோ தீவிரகவனம் செலுத்தினார். அதிலும், ஆழம் குறைந்த நீர்ப்பரப்பில் செல்லக்கூடிய வேகம் முயற்சியில் தீவிரகவனம்செலுத்தினார்.இதன் மூலம், கிழக்கில் விடுதலைப் புலிகளின் நடவடிக்கைகளை கட்டுப்படுத்த முடியும் என்பதும் யாழ் குடாநாட்டின் முற்றுகையைப் பலப்படுத்த முடியும் என்பதும் அவரது குறியாக இருந்தது.



இதற்கேற்ப அதிவேக நவீன படகுகளை வெளிநாட்டிலிருந்து கொள்வனவு செய்வதிலும், உள்நாட்டில் தயாரிப்பதிலும் ஆர்வம் சொலுத்தினார். இதன் அடிப்படையில், பத்து நீருந்து அதிவேக படகுகளை சிறிலங்கா கடற்படை பெற்றது.பிரான்சுடன் கூட்டாக இணைந்து மேலும் நவீன படகுகளை கட்டும் ஒப்பந்தத்திலும் கைச்சாத்து இடப்பட்டது. இறுதியாக, இறப்பதற்கு முதல் நாள் கிளான்சி பெர்னான்டோ கையொப்பம் இட்ட ஒ பந்தம்கூட அதிவேக படகுகள் கொள்வனவு தொடர்பாகவே இருந்தது.

இதேவேளை, கடற்படைத்தளபதி கிளான்சிபெர்னான்டோவும்சிறிலங்கா ஆயுதப்படைகளின் தலைமைப்பீடத்திற்குள் நடைபெறும் அதிகாரப்போட்டியின் பங்காளிகளில் ஒருவராகவே இருந்தார். கூட்டுப்படைத்தலைமையகத்திடம் அதிகாரம் இருப்பதை எதிர்த்த கிளான்சி பெர்னான்டோ. கூட்டுப்படை தளபதிகளுக்கு ஊடாக அல்லாமல், சகல அதிகாரங்களும் தம்மிடம் கையளிக்கப்பட்டால் நல்ல பயனைக்காட்ட முடியும்'' என இவ்வருடம் சிறிலங்கா ஜனாதிபதிக்கு அனுப்பிய கடிதத்தில் இராணுவத்தளபதி லெப். ஜெனரல் சிசில் வைத்தியரெட்னா விமானப்படைத்தளபதி ஏயர் மார்ஷல் ரெரன்ஸ் குணவர்தனா, ஆகியோருடன் சேர்ந்து கையொப்பம் இட்டிருந்தார்.

ஆயுதப்படைகளின் தலைமைப்பீடத்திற்குள் ஏற்பட்ட இவ் அதிகாரப் போட்டியானது தனியாக முப்படைத் தளபதிகளுக்கும் கூட்டுப்படைதலைமையகத்திற்கும்இடையில்ஏற்பட்ட உருவான முத்தரப்புப் பிரச்சினையாகும் ஆனால், முத்தரப்பு பிரச்சினையாக இருப்பினும் கூட்டுப்படை நடவடிக்கை தலைமையகத் தளபதி ஜெனரல் ஹமில்டன் வனசிங்கா, பாதுகாப்பு அமைச்சுக்களின் செயலாளர்களான ஜெனரல் சிறில் ரணதுங்கா, முன்னாள் விமானப்படை தளபதி வால்டர் பெர்னான்டோ ஆகியோருக்கும் முப்படைகளின் தளபதிகளான இராணுவத்தளபதி, விமானப்படைத்தளபதி, கடற்படைத்தளபதி ஆகியோருக்கும் இடையிலான இருதரப்பு பிரச்சினையாக இதனைத் தொகுத்தும் பார்க்கலாம்.

இவ்வகையில் கடற்படைத்தளபதி கிளான்சி பெர்னான்டோவின் மரணம் இராணுவத்தளபதி சிசில் வைத்திய ரெட்னாவிற்கும் விமானப்படைத்தளபதி ரெரன்ஸ் குணவர்த்தனாவிற்கும் ஓர் ஈடு செய்ய முடியாத இழப்பாகவே இருக்கும் என்பதில் சந்தேகமில்லை இராணுவத்தளபதி சிசில் வைத்தியரெட்னாவைப் போன்றோ அன்றி விமானப்படைத் தளபதி ரெரன்ஸ் குணவர்தனா போன்றே கூட்டுப்படை நடவடிக்கை தலைமைத் தளகர்த்தாஜெனரல் ஹமில்டன்வனசிங்காவுடனும் பாதுகாப்புச் செயலாளர்களான சிறில் ரணதுங்கா வால்டர் பெர்னான்டோ ஆகியோருடன் கடற்படைத்தளபதி கிளான்சி பெர்னான்டோ நேரடியாக முரண்பட்டுக்கொண்டதாகத் தெரியவில்லை. ஆயினும் இராணுவம் விமானப்படைத் தளபதிகளின் பக்கமே நிலையான சார்பை அவர் எடுத்திருந்தார். இந்நிலையில் விமானப்படைத்தளபதியின் அதிகாரங்கள் இன்று கூட்டுப்படை நடவடிக்கைத் தலைமைத் தளபதியினால் உதவி விமானப்படைத் தளபதியிடம் பகிர்ந்தளிக்கப்பட்ட நிலையில் முக்கியம் பெறுகின்றது.

கடந்த ஆகஸ்ட் மாதம் அராலிப் பகுதியில் விடுதலைப் புலிகளின் கண்ணிவெடியில் சிக்கி இறந்த இராணுவத்தின் வடபிரதேசத்தளபதியான லெப். ஜெனரல் டென்சில்

**- ஜெயராஜ் -**

கொப்பேகடுவவின் மரணம் இராணுவத்தில் ஓர் வெற்றிடத்தை ஏற்படுத்தியதை எவரும் மறுக்க முடியாதது போன்று கடற்படைத்தளபதி கிளான்சி பெர்னான்டோவின் மரணம் கடற்படைதலைமையில் உடன்நிரப்பமுடியாத நிலையை ஏற்படுத்தியுள்ளது என்பதை எவரும் மறுப்பதற்கில்லை.இதேவேளை டென்சில் கொப்பேகடுவவின் மரணம் ஜெனரல் ஹமில்டன் வனசிங்காவின் ஒருகையை முறித்தது என்றால் கடற்படைத்தளபதி கிளான்சி பெர்னான்டோவின் மரணம் இராணுவத்தளபதி சிசில் வைத்திய ரெட்னாவின் ஒரு கையைமுறி

( 6ஆம் பக்கம் பார்க்க )

ஒரு திரைப்படம்போல (திரைக்கு ஏற்றது) நிகழ்ச்சிகள் தீட்டப்பட்டுள்ளன. செர்கய் ஐசன்ஸ்டன் கூறியதுபோல் ஒரு நாவல் எந்தளவிற்கு திரைப்பட உத்திகளைக் கொண்டிருக்கிறது என்பதனைப் பொறுத்து அதன் வெற்றிதோல்வி அமையும்' என்ற கருத்து இந்நாவலைப் படிக்கும்போது என்மனதில் எழுந்தது. இந்தத் தகவல்களையும் விபரங்களையும் எல்லாராலும் பெற்றிருக்கமுடியாது. இவரது நெருங்கிய நண்பர்கள் போராளிகளாகவும், சிலர் மாவீரர்களாகவும் இருப்பதாலேயே இந்த வெற்றியை இவர் பெற்றுள்ளார், இவ்வீரர்கள் இவருக்குத் தெரிவித்த தகவல்களை இவர் தமிழுலகிற்கு அளித்துள்ளார்,

வெறும் விவரணநூல் என்ற மட்டிலில்லாது கலைப் படைப்புக்குரிய தன்மையும் காணப்படுவது இதன் சிறப்பு. கதாநாயகன் வாழ்வினைச் சுட்டும் சில சம்பவங்கள் - காடைமுட்டை, வெளவால் வேட்டை போன்றன. ஒருவன் தனது மண்ணின் சில விசேட அம்சங்களை எப்படி எப்படியெல்லால் உள்வாங்கி உணர்வால் நிறைவு பெறுகிறான்என்பதனையும் அதற்கு ஆபத்து வந்தவிடத்து அதற்காகப் போராடத் துணிகிறான் என்பதையும் அழகுற எடுத்துக் காட்டுகிறார்.

தனது கிராமத்தில் வெளவாலுக்காகக் கட்டப்படும் வலையில் சிக்கிய வெளவாலின் நிலையையும், வவுனியாவில் அவன் தலைகீழாகக் கட்டித் தொங்கவிடப்பட்ட நிலையையும் ஒப்ப நோக்குவது மனதை ஆழமாகத் தைக்கிறது

'சுவடுகள்' நேரடியாக போராட்டத்தைச் சித்தரிக்காவிட்டாலும், போராட்டத்திற்கான காரணகாரியங்களையும்பின்னணிகளையும் மக்கள் முன் கொண்டுவந்தளவில் வெற்றிபெற்றுள்ளது என்றே கருதவேண்டும்.

ஈழநாதம்

சுடற்படைத் தளபதியின் காரை முந்திச் சென்றவர்

# காயமடைந்தவரை எடுத்துச் செல்ல வாகனம் தர மறுத்தாராம்

(கொழும்பு)

கொழும்பில் கடந்த திங்களன்று இடம்பெற்ற குண்டுத் தாக்குதலில் காயமடைந்திருந்த லெப்டினன்ட் குணசேகரவை ஏற்றிச் செல்ல வாகனத்தை கேட்டபோது கஜபாகு ரெஜிமென்டைச் சேர்ந்த மேஜர் சென்பீ மறுத்துவிட்டார் என தெரிவிக்கப்படுகிறது.

குண்டுத்தாக்கு நடைபெற்ற வாகனத்தை முந்திச் செல்ல மேஜர் சென்பீ முயன்றபோது அவ்வாறு செய்யவேண்டாம் எனசமிகஞைசெய்யப்பட்டது. ஆனால் அதனையும் மீறி அவர் சென்றார்.

குண்டுத்தாக்குதல் நடைபெற்றதும் சிறிது தூரத்தில் இவர் தனது வாகனத்தை நிறுத்தியிருந்தார். அப்பொழுது காயமடைந்த லெப்டினன்ட் குணசேகரவை ஏற்றிச் செல்ல அவரது வாகனத்தை கடற்படை அதிகாரிகள் கேட்டபோது அவர் மறுத்துவிட்டார். பின்னர் போக்குவரத்து கண்காணிப்பு பொலிசாரின் வாகனத்தில் குணசேகரவை ஏற்றிச் சென்றபோது அவர் வழியில் மரணமடைந்தார். இவ்வாறு விசாரணைகளின் போது தெரிவிக்கப்பட்டது.

# சுதந்திரக்கட்சி ஆட்சியிலேயே தீவிரவாதம் ஆரம்பித்தது

– பிரேமதாசா

கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் கிளான்சி பெர்னான்டோ கொல்லப்பட்டமைக்காக நான் பதவி விலக வேண்டுமென சிறிலங்கா சுதந்திரக் கட்சித் தலைவி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா என்னைக் கோருகின்றார். அவ்வாறானால் சிறிமாவோ பண்டாரநாயக்காவின் ஆட்சிக்காலத்தில் தான் யாழ். மேஜர் அல்பிரட் துரையப்பா கொலை செய்யப்பட்டார். அப்போது சிறிமாவோ பதவி துறந்தாரா?

இவ்வாறு கேள்வி எழுப்பி உள்ளார் சிறிலங்கா ஜனாதிபதி ஆர். பிரேமதாசா.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில் திருமதி பண்டாரநாயக்காவின் ஆட்சிக்காலத்திலேயே தீவிரவாதம் வடபகுதியில் தலைதூக்கியது. எனது பதவியை ராஜினமா செய்வதனால் தீவிரவாதச் செயல்களின் எண்ணிக்கை குறைந்து விடுமா அல்லது நாட்டின் பிரச்சினை தீர்த்துவிமா எனவும் அவர் கேள்வி எழுப்பினார்.

மேலும் திருமதி பண்டாரநாயக்கா ஒரு தேர்தல் தொகுதி மக்களால் மட்டுமே தெரிவு செய்யப்பட்ட ஒரு அங்கத்தவர் நான் முழு நாட்டு மக்களாலுமே தெரிவு செய்யப் பட்டுள்ளேன்.

மனித சங்கிலிப் போராட்டத்தில் தாயும் மகனும் கைகோர்த்து நிற்க முடியாதுள்ளனர். அதுபோல் மகனும் சகோதரியும் கைகோர்த்து நிற்க முடியாமல் நிற்கின்றனர். இந்நிலையில் ஒருதேர்தல் வந்தால் மகனே தாய்க்கு எதிராக வாக்களிப்பார் எனவும் தெரிவித்தார்.

1988 க்குப் பின் இணைந்த

# கூட்டுறவு ஊழியருக்கு கொடுப்பனவு வெட்டு

(யாழ்ப்பாணம்)

1988 -ம் ஆண்டு தை மாதம் முதலாம் திகதிக்குப் பின்னர் சேவையில் இணைந்த கூட்டுறவு ஊழியர்களுக்கு இதுவரை வழங்கப்பட்டு வந்த மேலதிக கொடுப்பனவான ரூபா முன்னூற்றி எட்டை வழங்காது நிறுத்தும்படி கூட்டுறவு அமைச்சு பல நோக்கு கூட்டுறவுச்சங்கங்களுக்கு அறிவித்தல் விடுத்துள்ளதாக தெரிகிறது. இதனால் சம்பந்தப்பட்ட ஊழியர்கள் மத்தியில் பெரும் அதிருப்தி நிலவுவதோடு, விலைவாசி ஏற்றத்தினால் வாழ்க்கைச் செலவு அதிகரித்துள்ள இவ் வேளையில் மேற்படி கொடுப்பனவு நிறுத்தப்பட்டிருப்பது பல திறமை வாய்ந்த ஊழியர்கள் சேவையில் இருந்து தாமாகவே விலகிக் கொள்ள ஏதுவாக அமையும் என பல நோக்கு கூட்டுறவுச் சங்கங்கள் கவலை கொண்டுள்ளதாகவும் தெரிகிறது. (22)

# குண்டுத்தாக்குதல்தொடரும் டி.பி.விஜயதுங்காஎச்சரிக்கை

(கொழும்பு)

கொழும்பு கேந்திரமுக்கியம் வாய்ந்தபகுதிகளில் பல குண்டுகள் வெடிக்க இருப்பதாகப் பிரதமர் டி பி. விஜயதுங்கா எச்சரிக்கை செய்துள்ளார்.

எனவே பொதுமக்கள் மிகவும் அவதானமாக இருக்குமாறும் அவர் கேட்டுள்ளார். புலனாய்வுத் துறைக்குக் கிடைத்த தகவலையடுத்து மக்களுக்கு தாம் தெரிவிப்பதாகவும் அவர்கூறினார்.

இதேவேளை கொழும்பு உட்பட முக்கிய இடங்களில்படையினர்உஷார்ப்படுத்தப்பட்டுள்ளதாகவும், சந்தேகத்திற்கு இடமாக நடமாடுபவர்கள் தொடர்பான தகவலை உடனடியாக வழங்குமாறுவேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

# கடற்படை தளபதிக்கு நேற்று இறுதிச் சடங்கு

(கொழும்பு)

கடந்த திங்களன்று தாஜ் சமுத்திரா ஹோட்டலுக்கு அருகில் நடந்த குண்டுத் தாக்குதலில் கொல்லப்பட்ட கடற்படைத் தளபதி கிளான்சி பெர்னான்டோவின் இறுதிச் சடங்குகள் நேற்று பிற்பகல் 3.00 மணிக்கு கனத்தை மயானத்தில் பூரண இராணுவ மரியாதையுடன் தகனம் செய்யப்பட்டது.

# பதில் கடற்படைத் தளபதி மோகான் சமரசேகர

சிறிலங்காவின் பதில் கடற்படைத் தளபதியாக ரியர் அட்மிரல் டோரி மோகான் சமரசேகர நியமிக்கப்பட்டிருக்கிறார்.

NEW SCIENCE ACADEMY
JAFFNA
94A/L
ZOOLOGY
BY MR. தம்பிராஜா B.Sc
புதிய பிரிவு ஆரம்பம்
21-11-92- சனிக்கிழமை 7. 00 மணி
(சி-5419)

# காணிசம்பந்தமான கலந்துரையாடல்

நில அளவையாளர் ஒருங்கிணைப்புக் கழகத்தினரால் இன்று வெள்ளி மாலை 2-00 மணிக்கு யாழ். இந்துக் கல்லூரியில் உள்ள குமாரசாமி மண்டபத்தில், நில அளவை, நிலவரைபடம், நில அளவைப் பயிற்சி, காணிப் பிரச்சினைகள், காணிச் சட்டங்கள், காணி நிர்வாகம், காணிப் பதிவு இவற்றுடன் சம்பந்தப்பட்டோருக்கான கலந்துரையாடல் ஒன்று நடைபெற உள்ளது. இவற்றுடன் சம்பந்தப்பட்ட சகலரையும் இந் நிகழ்ச்சியில் கலந்து கொள்ளுமாறு இக் கழகத்தின் நிர்வாகிகள் அழைப்பு விடுக்கின்றனர். (இக் கலந்துரையாடலின் விபரத்திற்கு நேற்றைய பத்திரிகையைப் பார்க்கவும்) கலந்துரையாடலின் முடிவில் சாவகச்சேரி, பருத்தித்துறை வல்வெட்டித்துறை. தெல்லிப்பழை, சங்கானை ஆகிய இடங்கள் வரை திரும்பிச் செல்வோருக்கான வாகன

## நாளை

திணைக்களங்கள், சமூகசேவை நிலையங்களில் தமிழீழ தேசியக்கொடிகள்பறக்கவிடப் படவுள்ளன. தொடர்ந்து வட்டாரீதியாக இரண்டு மாவீரர் நினைவுக் கூட்டங்கள், பட்டிமன்றங்கள், கவியரங்கங்கள், நாடகங்கள் போன்ற கலை நிகழ்ச்சிகளும் நடைபெறவுள்ளன. வட்ட ரீதியாக சமூக சேவைகள், சிரமதானங்கள், நூல் வெளியீடுகள், பொது

**மாவீரர்களே!**
நீங்கள் புதைத்த இடத்தில் புல்லா முளைக்கிறது!

இல்லையே!
போராடும் எங்களுக்குள் புது வீரமல்லவா பிறக்கிறது!

நம்புங்கள் தமிழீழம் நாளை பிறக்கும்.
(மாவீரர் நாள் - 1992 சுவரொட்டிகள், பதாதை வசனங்கள்)

வெளிவந்து விட்டது
அழகியற் கல்வி, பரத நாட்டியம்
ஆசிரியர் நாட்டியக் கலைமணி
திருமதி யசோதரா விவேகானந்தன்
(ஆசிரிய ஆலோசகர் தென்மராட்சிக் கல்விக் கோட்டம்)
மாணவர்கள் அடிப்படை அறிவினையும் ஆரம்ப விளக்கத்தினையும் அறிய இந்நூல் உதவும்
வெளியீடு
கமலாவதி பிரசுரம்
சரசாலை
விலை ரூபா 48 சதம் 75
சகல புத்தக நிலையங்களிலும் கிடைக்கும் [3360]

## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி



**கப்டன் றமேஷ்**
[புவனேந்திரன் ஸ்ரீரமணன்]
(அரியாலை)

பெற்றதாய் வீட்டில் ஜனனம் 24- 08- 1970

பிறந்த பொன்நாட்டில் வீரச்சாவு 20- 11- 1991

புவனத்தின் இந்திரனாய் அரியாலையூர் பிறந்து
வேங்கை றமேஷாய் வீரத்துடன் மலர்ந்து
பூமகளாம் ஈழத்தின் பொன்மகனாய் உலவியவன்
அரசியலுக்கரசியலாய் ராணுவத்தில் ராணுவமாய்
அனைத்திற்கும் தயார் என்று அறைகூவிய மாவீரன்!
பூநகரித் தாக்குதலில் புகழுடம்பெய்தியவன்...
இளமையின் உணர்வுகளை இன்பக் கனவுகளை
ஈழத்துக்காய் உதறியவன் 'இனியவன் கப்டன்றமேஷ்'
இவனோடு சாவில் இணைந்த வீரருக்கும்
எம் நினைவு அஞ்சலிகள்.


இடங்கள் வரை திரும்பிச் செல்வோருக்கான வாகன வசதி ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

– நிர்வாகத்தினர்

(3661)

## 3-ம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

மண்ணில் 28 – 07 – 1925



விண்ணில் 10 – 10 – 1992

## திருச்செல்வம் மேரியோசவ்

"உயிர்ப்பும் உயிரும் நானே என்னில் விசுவாசம் கொள்பவன் இறப்பினும் வாழ்வான்"

அரு: 11: 25

இவரின் ஆன்ம இளைப்பாற்றிற்காக 21- 11- 92 சனிக்கிழமை (நாளை) காலை 10. 30 மணிக்கு அச்சுவேலி புனித சூசையப்பர் ஆலயத்தில் இரங்கற் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.

திருப்பலியின் பின்னர் புனித திரேசா மகளிர் பாடசாலையில் இடம்பெறும் மதிய உணவில் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

12- 10- 92 இல் நடைபெற்ற அன்னாரின் மரணச் சடங்குகளில் பங்குபற்றியவர்களுக்கும், பல வழிகளிலும் எமக்கு உதவிகள் செய்தவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

சங்கானை வீதி,
அச்சுவேலி.

தாய், மனைவி, பிள்ளைகள்,
சகோதரர்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

(3671)

சிறிலங்காவின் பதில் கடற்படைத் தளபதியாகக் கொம

### கொழும்பின்

த்தசெதன்றேகூறலாம் ஆனால் இதில்தனிப்பட்ட ரீதியில் யார் எவ்வாறு லாபமடைந்தாலும் சரி, நஷ்டம் அடைந்தாலும் சரி சிறிலங்கா ஆயுதப்படைக்கு இவரின் இழப்பு பேரிழப்பு ஆகும். அத்தோடு போரின் விளைவுகளை சிறிலங்காவின் அதிகார பீடத்தின் உயர் மட்டம் மிக வேகமாகச் சசப்புடன் ஏற்றுக்கொள்ளவேண்டிய அவசியம் உருவாகிவிட்டமையும் மறுப்பதற்கில்லை

### விடுதிகள்

உட்பட அனைத்துப் பகுதிகளிலும் இளைஞர்கள் கைது செய்யப்பட்டு வருகின்றனர். வீடுகள், விடுதிகள் அனைத்தும் பாதுகாப்புப்படையினரால் சல்லடை போட்டுத் தேடப்பட்டு வருகின்றது.

அதேவேளை ஆயுதப் படையினரது தேடுதல் வேட்டையில் இருந்து தப்பிக் கொள்வதற்காக தமிழ் இளைஞர்கள் தண்ணீர்த் தொட்டிகளையும் வீட்டுக் கூரையின் கீழ்ப் பகுதிகளையும் நாடியதாக அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன. இவ்வாறான பகுதிகளில் சில இளைஞர்கள் 36 மணி நேரத்திற்கு மேலாகத் தங்க வேண்டியதாகியது. இவர்களுக்கான உணவுகள் பொதி செய்யப்பட்டு இரகசியமாக அனுப்பி வைக்கப்பட்டதாக கூறப்படுகிறது. அத்துடன் வீதிகளில் தமிழ் இளைஞர்கள் நடமாட அச்சம் கொண்டிருந்தனர். இதனால் எவரும் வீதிக்கு வரவில்லை.

### மாதாந்தம்

பட்டிருக்கிறது. இதற்கான கடுமையான உத்தரவொன்று அத்தியாவசிய சேவைகள் ஆணையாளருக்கு பிறப்பிக்கப் பட்டிருக்கிறது. (க)

டோர் மோகான் சமரசேகர நியமிக்கப்பட்டிருக்கிறார். இவரே கடற்படைத்தளபதியாகவும் நியமிக்கப்படலாம் எனத் தெரியவருகிறது.

### கிளாலி

இதனைத் தொடர்ந்து அச்சமடைந்த மக்கள் தமது பயணங்களைக் கைவிட்டுத் திரும்பினர். இதனால் போக்குவரத்து ஸ்தம்பிதமடைந்தது. இத்தாக்குதலால் ஏற்பட்ட சேதவிபரம் தெரியவில்லை.

### ஜப்பான்

விரும்பவில்லை எனவும் தெரிவித்தார்.

இவர்களின் இந்த தயக்கத்திற்கு காரணம் இந்தவாரம் கொழும்பில் நடைபெற்ற கடற்படைத் தளபதி மீதான குண்டுத் தாக்குதல் ஆகும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

### தோப்பூர்

மடைந்தது. இக் குண்டு வெடிப்பை அடுத்து இப் பாலம் பாவிக்க முடியாத நிலையை அடைந்துள்ளதாக தெரியவருகிறது.

சேவைகள், சிரமதானங்கள், நூல் வெளியீடுகள், பொது அறிவுப் போட்டிகள் ஆகியனவும் இடம் பெறவுள்ளன.

### மக்கள் அஞ்சலிக்கு துயிலும் இல்லங்கள்

யாழ். மாவட்டத்தில் வலிகாமம், வடமராட்சி, தென்மராட்சி பகுதிகளில் உள்ள மாவீரர் துயிலும் இல்லங்கள் பொதுமக்கள் மலர்தூவி மரியாதை செலுத்துவதற்காக நாளை காலை 9 மணிமுதல் திறக்கப்பட்டிருக்கும். இந்த மாவீரர் வாரத்தில் தினமும் இம்மாவீரர் துயிலும் இல்லங்களில் பாடசாலை மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் சென்று மலர் தூவி வணக்கம் செலுத்துவதற்கான ஒழுங்குகள் செய்யப்பட்டுளளதாக யாழ். மாவட்ட அரசியல் துறை செயலகம் அறிவித்துள்ளது.

### பெற்றோர் கெளரவிப்பு

26 ஆம்திகதி மாவீரர்களின் பெற்றோர்கள் அனைவரும் கெளரவிக்கப்படவுள்ளனர்.

## உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்

## 19-11-92

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்: 6750

வடபகுதிக்கு உள்ளே அனுமதித்த வாகன இலக்கம்:

28-0657, 42-9220, 24-4875, 26-4568, 24-4481, 26-6309, 27-5682, 24-4384, 22-2250, 25-8250, 24-1685, 27-5187, 42-2355, 41-8557, 42-2397, 28-9633, 41-1996, 24-5734, 26-1658, 24-9938, 36-4187, 24-7084, 27-6887, 41-7841, 27-6692, 42-849, 40-0919, 26-7546, 28-6853, 28-9259, 28-1185.

**தேசத்தை நீங்கள் நேசிப்பது உண்மையானால் பசிய மரங்களில் பாசத்தை வையுங்கள்**

ஈழத்துக்காய் உதிரியவன் 'இனியவன் கப்டன்றமேஷ்' இவனோடு சாவில் இணைந்த வீரருக்கும் எம் நினைவு அஞ்சலிகள்.

171/3 மானிப்பாய் வீதி,
யாழ்ப்பாணம்.

உறவினர்கள்,
நண்பர்கள்

(3667)

## 5ஆம் ஆண்டு நினைவலைகள்



அன்னையின் மடியில்: 01 - 10 - 39

அன்னியன் அழிப்பு: 20 - 11 - 87

திதி: 20-11-92

அமரர்

## சின்னர் இராசதுரை

அன்பின் திருவுருவே கொடுமதி படைத்த கூலிப்படையின் குண்டினைத் தாங்கி விண்ணிடை சென்று ஐந்தாண்டு ஆனதுவே. அந்த எண்பத்தேழை (87) எங்களால் மறக்க முடியுமா, நீங்கள் வளர்த்த செடிகள் எல்லாம் செழித்தே நிற்கிறது. நீங்கள் நினைத்த காரியங்கள் எல்லாம் நிலை குலைந்து விட்டதுவே. உங்கள் ஆசி இருக்கும் வரை நாங்கள் நிலை குலைய மாட்டோம், எம்மை விட்டு பிரிந்து இறைவனடி சேர்ந்த இந்நாளில் உம் ஆத்மா சாந்தியடைய வேண்டி நிற்கிறோம்.

உங்கள் பிரிவால் துயருறும்
மனைவி, பிள்ளைகள்,
மாமன், மாமி,
மைத்துனன்மார், மைத்துனிமார்,
உற்றார், உறவினர்.

சுதுமலை தெற்கு,
மானிப்பாய்.

(சி-5431)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31 ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1992 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 20 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.